Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-22 | 06-07-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -139

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கணகவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9944 077-6059672

## கரும்புலிகளுக்குத் தேசியத் தலைவர் வீரவணக்கம்!





பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வீரகாவியமாகிய கரும்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியதோடு, கரும்புலிகள் நினைவாக நிதர்சனம் நிறுவனத்தால் உருவாக்கப் பெற்ற உயிராயுதம் -05 கடற்கரும்புலிகள் பாகம் -08 ஞானரதனின் புயல்புகுந்த பூக்கள் காவியப் படைப்புக்களின் வெளியீட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பித்தார். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்..)

# கரும்புலிகளுக்கு மக்கள் உணர்வுபூர்வ அஞ்சலி;

# பேரணிகளிலும், நிகழ்வுகளிலும் பெருமளவில் பங்கேற்பு!

## காலை, மாலையென நடந்த நிகழ்வுகள்

(நமது நிருபர்)

**தமிழர் தாயகப்பகுதியெங்கும் நேற்றுஎழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்ட கரும்புலிகள் நாள்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். காலை 9.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாலை நிகழ்வுகளில் கரும்புலிகள் உருவப்படம் பவனி என்பவற்றுடன் இரவு சிறப்புரைகளும், கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.**

கடந்த முதலாம் திகதி முதல் கரும்புலிகள் நினைவாக பல்வேறுநிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் இடம் பெற்றுவந்தன.

இதிலே விளையாட்டுப் போட்டிகள் சிரமதான நிகழ்வுகள், இலக்கியப் போட்டிகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் மாவட்ட ரீதியாக 261 கரும்புலி களின் உருவப்பட ஊர்தி பவனி களும் இடம் பெற்றன. மேலும் கரும்புலிகளின் நினைவாலயங்கள் அமைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு களும் இடம் பெற்றன.

இவ்வகையில் கரும்புலிகள் நாளான நேற்று மாவட்ட ரீதியாக இடம் பெற்ற நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)



நெல்லியடியில் நடைபெற்ற கரும்புலிகள் உருவப்பட ஊர்தி பவனி.

- மட்டு. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்.-

## இரு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் போராளி ஒருவர் வீரச்சாவு; மூவர் காயம்!

மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள்மீது மேற்கொள்ளப்பட்ட இருவேறு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். மூன்று போராளிகள் படுகாயம் அடைந்துள்ளனர்.

காலை 9.15 மணியளவில் அரசடிசசந்தியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராசாவும், நிலானும் இனந்தெரியாதோரால்

(11ஆம் பக்கம் பார்க்க)


## மீண்டும் யுத்தத்தை முன்னெடுக்கும் வகையிலான வழிவகைகளை இராணுவம் செய்து வருகிறது

- வி.பு.களின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை கண்டனம்

சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகைகளைச் செய்தவண்ணமுள்ளனர் என விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் நேற்று விடுதலைப்புலிகள்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வெளியிட்ட கண்டன அறிக்கைகளில் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு

(11ஆம் பக்கம் பார்க்க)



முல்லைக் கடற்பரப்பில் நேற்று இடம்பெற்ற கடற்கரும்புலிகளின் சாகச நிகழ்வு. (படம் லோகீசன்)






# கரும்புலிகள் நினைவாக நிதர்சனம் நிறுவனத்தின் வெளியீட்டு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர்













பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# சட்டநுணுக்கம்தெரிந்த சதாம்ஹுசைன் நீதிமன்றத்திற்கு சவாலாக இருப்பார்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

(பாக்தாத்)

**ஈராக் நீதிமன்றத்தின் முன் பல குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியுள்ள ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் சட்டம் படித்தவர். இதனால் நீதிமன்ற விசாரணையின் போது அவர் ஓர் சவாலாக விளங்குவாரென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.**

குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி நீதிமன்ற விசாரணையிலுள்ள முன்னாள் உயர் அதிகாரிகளின் வழக்கறிஞராகவுள்ள அலிஹீஷான் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; சதாம் 20 ஆண்டுகள் சனாதிபதியாகவிருந்து பல சட்டங்களில் கையெழுத்திட்டவர் அவருக்கு சட்டநுணுக்கங்கள் நன்றாகத் தெரியும். அவருக்கு எதிராக அமர்ந்துள்ள நீதிபதியோ 1999 ஆம் ஆண்டு சட்டம் படித்துவிட்டு பதவிக்கு வந்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த வியாழக்கிழமை முதல் நாள் விசாரணை நடைபெற்ற வேளை விசாரணையின் போது சதாம் நான் ஈராக் நாட்டின் சனாதிபதி ஈராக்கின் அரசியல் யாப்பின் படி சனாதிபதியை நீதிமன்றில் நிறுத்தி விசாரிக்க முடியாது. நீதிபதியோ ஈராக்கிலுள்ள கூட்டணிப்படைகளால் நியமிக்கப்பட்டவர் எனக் கூறியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் விசாரணை நடைபெறுகின்ற வேளை நீதிபதிக்கு சதாம் ஓர் சவாலாக இருப்பாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆசியான் அமைப்பில் பாக்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) பிராந்திய அமைப்பின் உறுப்பு நாடாக பாகிஸ்தான் முறைப்படி கடந்த வெள்ளிக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளது.

அண்மையில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட அமெரிக்க கடற்படைவீரரான அலி ஹசனின் புகைப்படத்தை அவரது தந்தை கையில் ஏந்தியுள்ளார்.




# ஆயுதங்களைக்கைவிட வேண்டும் தீவிரவாதிகளிடம் ஈராக் பிரதமர் கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள தீவிரவாதிகள் அனைவரும் ஆயுதங்களை கைவிட வேண்டுமென இடைக்கால பிரதமர் கியாத்அல்லாவி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தீவிரவாதிகள் தமது வன்முறைகளை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார். இதே வேளை இஸ்லாமிய ஆன்மீகத் தலைவ ான அல்கத்தார் ஈராக்கியர்கள் அனைவரும் நாட்டில் நிலைகொண்டுள்ள ஒருலட்சத்து அறுபதாயிரம் அன்னியப்படைகளை எதிர்த்து போராட வேண்டுமென கூறியுள்ளார். அரசிற்கும் அல்கத்தார் தலைமையிலான அமைப்பிற்குமிடையேயான இணக்கப்பாட்டுக் குழுவை கடந்த சனிக்கிழமை பிரதமர் சந்தித்துள்ளார். இதன்போது தீவிரவாதிகள் ஆயுதங்களை கைவிடுமாறு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது குறித்து அல்கத்தார் கருத்துத் தெரிவிக்கையில்;

எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படுமாயின் ஆயுதங்களை கைவிடுவது பற்றி சிந்திக்கலாம் என தெரிவித்துள்ளார். இது மட்டுமல்லாமல் எதிர்வரும் சனவரி மாதம் சனநாயகமுறையிலான தேர்தல் இடம்பெற வேண்டுமெனவும் நாட்டில் பாதுகாப்பு உள்ளகப் பாதுகாப்புப் படையினிடம் கையளிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.



பலூஜாவில் நேற்று முன்தினம் எரிபொருள் கொண்டுசெல்லும் குழாய் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலால் தீப்பற்றி எரியும் விநியோகக் குழாயை அவதானிக்கும் ஈராக்கியர் ஒருவர்.

# இஸ்ரேலிய உலங்குவானூர்திகள் காஸா எல்லைப்பகுதியில் தாக்குதல்

## 6 பலஸ்தீனர் காயம்

(டெல்அவிவ்)

இஸ்ரேலியர்களின் உலங்கு வானூர்திகள் காஸா கரையோர எல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் தாக்கியதில் 06 பலஸ்தீனப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து இஸ்ரேலியப் படையினர் கருத்துத் தெரிவிக்கையில்; ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றின் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார். இதே வேளை நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய் குடியிருப்பாளர் ஒருவர் உட்பட மூன்று பலஸ்தீனாகள் மூன்று தாக்குதல் சம்பவங்களில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது தெரிந்ததே.

# அமெரிக்காவின் 228 ஆவது சுதந்திரதின கொண்டாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 228 ஆவது சுதந்திரதினம் அந்நாட்டு மக்களால் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கலிபோர்னியா மாநிலத்திலே மக்கள் மிக்க உற்சாகத்துடன் வீதிகளில் நின்று 228 ஆவது சுதந்திர தினத்தின் 100 ஆவது அணிவகுப்பைக் கண்டு ௧ளித்தனர். அமெரிக்க நாட்டின் தேசியக்கொடியின் வர்ணத்திலே உடைகளை அணிந்து வான வேடிக்கைகளை விட்டு மக்கள் தமது மகிழ்ச்சியை கொண்டாடினர்.

அல்ஹைறய்தா இயக்கத்தினரின் தாக்குதல்கள் இடம் பெறக்கூடும் எனப் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டு இருந்த நிலையிலும் அமெரிக்க மக்கள் அதனைப் பொருட்படுத்தாது உணர்வெழுச்சியுடன் இந்த சுதந்திர தினக்கொண்டாட்டத்திலே கலந்து கொண்டனர்.

# அமெ. கடற்படைச்சிப்பாயின் கொலைகுறித்த செய்திக்கு ஈராக் தீவிரவாதிகள் மறுப்பு

(பாக்தாத்)

ஈராக்கிய தீவிரவாதிகளினால் பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த லெபனானைச் சேர்ந்த அமெரிக்க கடற்படை அதிகாரியான அலிகுசைனை கொலைசெய்ததாக வெளியாகி உள்ள தகவலை கடத்தல்காரர்கள் மறுத்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருகையில், நேற்று முன்தினம் இரண்டு இணையத் தளங்கள் தீவிரவாதிகள் அலிகுசைனின் தலையினைத் துண்டித்து கொலை செய்து விட்டதாகவும், மற்றுமொருவரை பணயக்கைதியாக தடுத்து வைத்துள்ளதாகவும் தகவல்களை வெளியிட்டுள்ளது. ஆனால் தற்போது அக்குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு வெளிவந்த செய்திஉண்மைக்குப் புறம்பானதென்று மறுத்துள்ளனர்.

அலிகுசைனின் தந்தை தன் மகன் உயிருடன் இருப்பதாக எண்ணி பிரார்த்தனையில் ஈடுபடும் இதேவேளைஅவரது உறவினர்களும் குசைன் உயிருடன் இருப்பதாகவே எண்ணியுள்ளனர்.

ஆனால் அமெரிக்க இராணுவம் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், அமெரிக்கப் படையில் ஒரு அங்கத்தவராக குசைன் இருந்ததன் காரணமாக அவருக்கு உயிராபத்து அதிகம் இருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர். இருந்த போதிலும் அமெரிக்கப் படையினரும் லெபனானின் வெளிவிவகார அமைச்சும், அலிகுசைனின் உறவினர்களும் இதுபற்றிய எந்தத்தகவலையும் உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவே கூறுகின்றனர்.



இந்தியாவில் சிறிநகரில் சிறுதள்ளு வண்டியொன்றில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் காயப்பட்ட காஷ்மீர் சிறுவன் (சம்பவத்தில் இருவர் பலியாகினர்)



இந்தோனேசியாவில் வாக்குச்சாவடியொன்றுக்கு வாக்குப்பெட்டி ஒன்றை கொண்டு செல்லும் தேர்தல் பணியாளர்கள்.

# இந்தோனேசியாவில் சனாதிபதித்தேர்தல் சுகர்னோ புத்திரி, முன்னாள் தளபதி போட்டியில்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நேற்று வரலாற்று முக்கியத்துமிக்க சனாதிபதித் தேர்தல் நடைபெற்றுள்ளது.

சனாதிபதி ஒருவரை நேரடியாகத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் இதுவாகும்.

இத்தேர்தலில் 15 கோடிக்கும் அதிகமாக மக்கள் பங்குபற்றியுள்ளனர். 14 ஆயிரம் தீவுகளிலும் 50 இலட்சம் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இத்தேர்தலில் தற்போதைய சனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரி, முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் விராண்டோ ஆகியோர் முக்கிய போட்டியாளராக போட்டியிடுகின்றனர்.

தேர்தல் முடிவுகள் பத்து நாட்களுக்குள் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா 14 ஆயிரம் தீவுகளையும், மூன்று மாவட்ட நேர வலயங்களையும் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க
# ச.பொ.அபிவிருத்திவங்கி முயற்சி

**திருமலை மூதூர் பிரதேசத்தில் கட்டைபறிச்சானில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மக்களிடையே சேமிப்புப்பழக்கத்தை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.**

11.10.2003 அன்று திருமலையில் கிளையை ஆரம்பித்த சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி இதுவரை விவசாயம், மீன்பிடி, சிறுகடை, வியாபாரம் போன்ற முயற்சிகளுக்கு கடன்களை வழங்கி அதனூடாக சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு பெரிதும் செயலாற்றி வருகின்றது.




ச.பொ.அ.வங்கியினால் 33பேருக்கு இக்கடன்கள் சுமார் 08 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப் பெற்றுள்ளன.

270 பேர் சேமிப்புக் கணக்குகளை திறந்து வழமையாகியுள்ளனர். 186 பொதுச் சேமிப்பு கணக்குகளும், 84 சிறுவர் சேமிப்புக் கணக்குகளும் இதிலடங்கும் சுமார் 35 பேர் தொழில் முயற்சி விரிவாக்கத்திற்கென இவ் வங்கியில் கடனுக்கு விண்ணப்பித்துள்ளனர். சேமிப்புக்களை மேற்கொள்வதற்கான அறிவோ, ஈடுபாடோ இல்லாத மிக வறிய மக்கள் மத்தியில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி சேமிப்பின் முக்கியத்துவத்தையும், அதன் தேவையையும் உணர்த்தி சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து வருகின்றது.

போர், இனக் கலவரங்களால் சிதைத்தழிக்கப்பட்ட மூதூர் பிரதேசத்தில் வங்கிச் செயற்பாடுகள் எதுவுமே அற்றிருந்த சூழலில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி பணியை ஆரம்பிப்பதன் ஊடாக தம் வாழ்வின் முன்னேற்றத்திற்கும், இப்பிரதேச வளர்ச்சிக்கும் பெரிதும் உந்து சக்தியாக அமைந்துள்ளது என மூதூர் பிரதேச மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், திருமலை ஆகிய மாவட்டங்களில் கிளைகளை நிறுவி வறிய மக்கள் வாழ்வை மேம்படுத்தி நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (சோ)



முள்ளியவளை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கடந்த 2ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட போது முதல் தடவையாக மூவருக்கு உழவு இயந்திரங்கள் கடனாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வையே படத்தில் காண்கிறீர்கள்.

# பாதுகாப்பற்ற மின்சார விநியோகம் உயிராபத்தை விளைவிக்கும் அபாயம்

## – ஒரு வாரமாகியும் சீர் செய்யப்படவில்லை

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் அடிக்கடி மின்வழங்கல் சேவையால் மக்கள் ஆபத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போது வீதியோர மின் கம்பங்கள் சில வீழ்ந்து மின்கம்பிகள் அறுந்து வீதியில் கிடக்கும் நிலையில் அவற்றை சீர் படுத்தவோ, அகற்றவோ சம்பந்தப் பட்டவர்கள் எத்தகைய நடவடிக் கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக மாவடி அம்மன் ஆலயத்தின் முன்னுள்ள வீதியோரத்தில் சில மின் கம்பங்கள் அடியோடு முறிந்து வீழ்ந்து கிடக்கின்றன. மின்கம்பிகளும் அறுந்து நிலத்திலும் மரங்களில் தொங்கிக்கொண்டும் காணப்படுகின்றன. கடந்த ஒரு வார காலமாக இவ்வாறான நிலை இருந்து வருவது அவதானிக்கப் பட்டு வருகிறது.

இவற்றை சீர்படுத்தவோ அன்றி அகற்றிவிடவோ உரியவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

பாடசாலை செல்லும் மாணவர்கள், முன்பள்ளிச்சிறார்கள் உட்பட பெருமளவானவர்கள் இவ் வீதியைப் பயன்படுத்திவரும் நிலையில் இதையிட்டு சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காது அலட்சியம் காட்டுவதையிட்டு இப்பகுதி மக்கள் பெரும் விசனமடைந்துள்ளதோடு இவ் அலட்சியப்போக்கு பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

# வான் மீது மரம் வீழ்ந்தது இருவர் பலி; மற்றுமிருவர் காயம்!

(கொழும்பு)

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் பயணம் செய்த வான் ஒன்றின் மீது மரமொன்று முறிந்து விழுந்ததில் இருவர்உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாக நிட்டம்புவ பொலிசார் தெரிவித் நுள்ளனர். மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த இருவரும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் அல்லவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

# மீள்குடியமரும் இராமனூர் மக்கள் பல்வேறு நெருக்கடிகளால் பாதிப்பு

## அவல நிலையைப் போக்க வேண்டுகை

சிறிலங்காப் படையினரின் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த புளியங்குளம் இராமனூர் பிரதேச மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல்காரணமாக மீண்டும் தமது சொந்த நிலங்களில் வந்து குடியேறத் தொடங்கியுள்ளனர்.

ஆயினும் இவர்கள் தற்போது பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக அறிய வருகின்றது. அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் தமது விளைபூமியில் காப்பரண்களையும், பதுங்கு குழிகளையும், முட்கம்பி வேலிகளையும் அமைத்தும் இருந்துள்ளனர். இதனால் மீள் குடியேறிய மக்கள் தமது காணிகளின் எல்லைகளை இனங்காண முடியாமலும், எங்கெங்கு வெடி பொருட்கள் உள்ளன என்பது பற்றித் தெரியாமலுமுள்ளனர். பல காணிகளுக்கூடாக பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு ஆங்காங்கு மண்மேடுகள் காணப்படுவதாகவும் வெடிபொருட்களால் தமது உயிருக்கு பாதுகாப்பில்லாமல் இருப்பதாகவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவர்களுக்கான குடிநீர், அன்றாட சீவியம் நடத்துவதற்கான ஏது நிலை என்பன கேள்விக்குறியாக இருப்பதாகவும் விவசாயத்தை நம்பிவாழும் இவர்களின் நிலங்களும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவர்களின் அவல நிலையைப் போக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

# தம்பலகாமம் பிரதேசத்தில் முன்பள்ளிகள் பராமரிப்பு

திருமலை தம்பலகாமம் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தத் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், கல்வி சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.



சிறார் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 16 முன்பள்ளிகளை தமிழா புனர் வாழ்வுக்கழகம் கண்காணித்து, நெறிப்படுத்தி, வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றது. 16 முன்பள்ளிகளில் 04 முன் பள்ளிகள் முஸ்லிம் சிறார்களை மட்டுமே கொண்ட முன்பள்ளிகள் ஆகும். மேற்படி 16 முன்பள்ளிகளிலும் 425 சிறார்களுக்கு 25 ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர். ஆசிரியர்களில் 08 பேர் முஸ்லிம் ஆசிரியர்கள்.

மிகுந்த வசதிக் குறைவுகளுடன் முன் பள்ளிகள் இயங்குகின்றன. நிறைய உதவிகள் மேற் கொள்ள வேண்டியுள்ளன. முன் பள்ளி ஆசிரியர் சம்பளம், சிறார்களுக்கான சீருடைகள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டு முற்றம் என பல தேவைகள் முன்பள்ளிகளில் இனங் காணப் பெற்றுள்ளன. (சோ)

# கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரியில் கரும்புலிகள் நாள் அனுஷ்டிப்பு

கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நேற்றுக்காலை கரும்புலிகள் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்லூரி அதிபர் திருமதி இ.அரியரத்தினம் தேசியக்கொடியை ஏற்றி வைத்ததுடன் மாவீரர் தூயவனின் உறவினரான மாணவி செல்வி அபிராமி ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது. அதன் பின்னர் ஆசிரியை ஜெயலலிதா கரும்புலிகளின் தியாகம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

மாணவர்களினது கற்றல் செயற்பாடுகள் சொந்த மண்ணில் திறம்பட நடைபெறுவதற்கு முக்கிய காரணிகளான கரும்புலி மாவீரர்களை என்றும் மறந்துவிட முடியாதென வலியுறுத்திய அதிபர் அவர்களை தெய்வங்களாகப் போற்ற வேண்டுமெனக் கேட்டுக்கெண்டார்.

# சொந்தப் பிரதேசங்களில் கடமையாற்ற வட-கிழக்கு தமிழ் வைத்தியர்கள் மறுப்பு

## –சம்பளக் கொடுப்பனவை நிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருத்துவப் பட்டம் பெற்று வெளியேறும் தமிழ் மருத்துவர்கள் தமது பகுதிகளில் கடமைகளைப் பொறுப்பேற்க மறுப்பதையிட்டு சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கண்டனம் தெரிவித்துள்ளாா.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டப் படிப்பை முடித்து வெளியேறுகின்றவர்கள் யாழ்ப்பாணத்தில் சேவை செய்ய விருப்பம் உள்ளவராக இல்லையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் இடமாற்றங்களை ஏற்க மறுக்கின்ற மருத்துவ உத்தியோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவை நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண வைத்தியசாலைக்கு 243 வைத்தியர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். இவர்களில் எந்தவொரு வைத்தியரும் கடமையைப் பொறுப்பேற்கவில்லை என்று சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தில் ஜெயப்பூர் செயற்கைக் கால் பொருத்தல்

(அலுவலக செய்தியாளர்)

ஜெயப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிகழ்வு எதிர்வரும் 07ஆம் திகதியன்று கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் மன்னார் வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் மேற்படி ஜெயப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சிறுவர் நலத்திட்டப் பணியின் ஊடாக கிராம ரீதியில் குடும்பங்கள் இனங்காணல்

வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலத்திட்டத்தினர் கிராமங்களிலுள்ள மக்களைக் குழுக்களாக அமைத்து அவர்களுக்கு சேமிப்பு செயற்பாட்டை அதிகரித்து அதன் மூலம் கடன்களைப் பெற்று சுயதொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாட்டின் முதல் கட்டமாக அண்மையில் வவுனியா வீரபுரம் கிராமத்தில் குழு அமைப்பு இடம் பெற்றது.

தலைவராக மு.முருகையா, செயலாளராக க.ஆறுமுகம், பொருளாளராக பா.இராகுலன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிறுவர் நலத்திட்டப் பணியாளர்களால் இனங்காணப்பட்ட அப் பகுதியைச் சேர்ந்த பதின்மூன்று குடும்பங்களும் மேலதிகமாக இரு குடும்பங்களுமாக 15 குடும்பங்கள் தற்போது இக்குழுவில் இணைக் கப்பட்டுள்ளார்கள். மேலும் சிறுவர் நலத்திட்டப் பணியாளர்களினால் பயனாளிகள் இனங்காணப்படும் பட்சத்தில் குழுக்களுடன் அமைத்து செயற்படுத்தவும் உள்ளார்கள்.

# தபால் மா அதிபரின் அனுமதி கிடைக்காததால் புதிய யாழ்.பிரதம தபாலகம் திறக்கமுடியாத நிலையில்

(யாழ்ப்பாணம்)

**பிரதம தபால்மா அதிபரின் அனுமதி இன்மையால் மீளமைக்கப்பட்ட புதிய யாழ்.பிரதம தபாலகத்தை திறந்து மக்கள் பாவனைக்கு விடமுடியாத சூழ்நிலை காணப்படுவதாக தெரியவருகிறது.**

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் யாழ். கோட்டையடியில் இருந்த யாழ். பிரதம தபாலகம் சேதமாக்கப்பட்டது. இவ்வாறு சேதமாக்கி அழிக்கப்பட்ட தபாலகம் மீண்டும் பலகோடி ரூபா செலவில் முன்பு இருந்த இடத்திலேயே மீள நிர்மானிக்கப்பட்டுள்ள போதும் தபால்மா அதிபரின் அனுமதி இன்மையால் அதனைத் திறந்து மக்கள் பாவனைக்கு விடமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் யாழ்.பிரதம தபாலகத்தின் பணிகள் யாழ்.நகரப்பகுதியில் அடிப்படை வசதியற்ற கட்டடம் ஒன்றிலேயே இடம்பெற்று வருவதால் மக்களுக்கான தபாற் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (33)

# முன்பள்ளிச் சிறார்களின் கல்வி மேம்பாடு பற்றி வேலணை அரசியல் துறைச் செயலகத்தில் ஆராய்வு

(தீவகம்)

யாழ். தீவகத்தில் உள்ள வேலணைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட ஒன்றுகூடல் ஒன்று நேற்று முன்தினம் தீவகக்கோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

வேலணைப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ்நம்பி தலைமையில் இடம்பெற்றது இதில் வேலணைப்பிரதேச முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், முன்பள்ளி கல்விசார் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள், அரசபுறக்கணிப்புக்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வேலணைப்பிரதேச முன்பள்ளிகளில் பயின்று வரும் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களை அமுல் செய்தல், முன்பள்ளி சிறார்களின் கற்றல் நடவடிக்கைகளுக்குள்ளான தடைகள் என்பன குறித்து இதில் ஆராயப்பட்டது. (33)

# புற்றுநோயாளர் காப்பகம் யாழ்.நகரில் நிறுவ நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் புற்றுநோயாளர் காப்பகம் ஒன்று நிறுவப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ்.குடாநாட்டில் சிறந்த ஒரு புற்றுநோய் வைத்தியசாலை இன்மையால் புற்றுநோயாளர்கள் எதிர்கொள்ளும் துன்பங்களைக் கவனத்திற் கொண்டே இப்புற்றுநோயாளர் காப்பகம் ஒன்று நிறுவப் படவுள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த "கோன்" எனும் தொண்டர் நிறுவனத்தின் பலகோடி ரூபா நிதியுதவியில் இது அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (33)

# மக்கள் வாழ்விடங்களுக்கருகில் கழிவுகள் பொம்மைவெளியில் நோய்பரவும் அபாயம்

## -மாநகரசபை நிர்வாகத்திடம் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறை, பொம்மைவெளி, வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் யாழ். நகரக்கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதிகளில் பெரும் சுகாதார சீர்கேடுகள் நிலவி வருகின்றன.

மேற்படி பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களை அண்மித்த பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதிமக்கள் தொற்று நோய்கள் பரவும் அபாயங்கள் உட்பட பல்வேறு சுகாதாரச் சீர் கேடுகளால் ஏற்படும் தாக்கங்களுக்கும் இலக்காகி வருகின்றனர்.

இதனால் யாழ்.மாநகரசபை உட்பட பல்வேறு தரப்பினரிடமும் இப்பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்படல் வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## புகார்

மீசாலை முதலாம் வட்டாரம் வயற்கரை வீதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நகரசபை கவனிக்கவில்லையென மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இப்பகுதியில் உள்ள கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் இது குறித்து தெரிவித்துள்ள புகாரில் நகரசபையின் சுகாதாரப் பிரிவினர் துப்புரவுப் பணிகளில் ஈடுபடாததால் இப் பகுதியின் சாலைகள் குப்பை, கூழங்களால் சூழப்பட்டுள்ளதெனவும் சிதம்பரபிள்ளை கடைச்சந்தியில் இருந்து கேணியடி வீதிவரை மின்இணைப்பு இதுவரை கொடுக்கப்படவில்லை எனவும் இதனால் இப்பகுதி இருளில் மூழ்கி இருக்கிறதெனவும் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் ஒளிராத மின்விளக்குகள்

யாழ். திருநெல்வேலி கிழக்கில் உள்ள இராமலிங்கம் வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் கடந்த சில நாட்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதிப் பகுதியில் இரவு நேரங்களில் வீதி விபத்துக்கள், திருட்டு, வழிப்பறி போன்ற அசம்பாவிதங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தோன்றியிருக்கிறது. இது குறித்து மின்சார சபையினரிடம் பலதடவை முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

# சமூக தொடர்பாடல் அறிவூட்டல் செயற்திட்டம் யாழ். இல் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் மக்களிடையே சமூக தொடர்பாடல் சம்பந்தமான அறிவூட்டல் செயற்திட்டங்களை சர்வோதய இயக்கம் அமுல் செய்யவுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்கள், மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய கிராம வாழ். மக்களின் சமூக அபிவிருத்தி பொருளாதார மேம்பாடு என்பவற்றை நோக்காகக் கொண்டே இத்திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமான அறிவூட்டல் செயற்திட்டங்கள் போர் காரணமாக பின்தங்கிப் போயுள்ள நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் அமுல் செய்யப்படவுள்ளது. (33)

# யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பு பா.உறுப்பினர்கள் விஜயம்

## -மக்கள் குறைகளையும் கேட்டறிகின்றனர்

யாழ். மாவட்டத்தின் தமிழ்க் கட் சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பின் தங்கிய கிராமங்களுக்கான விஜயங்களை மேற்கொண்டு வருவதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்புத்துறையின் பின்தங்கிய பகுதிகளுக்கும், கஜேந்திரன் தீவகப் பகுதிகளுக்கும், சிவநேசன் வடமராட்சிப் பகுதிகளுக்கும், மாவை சேனாதிராசா அச்சுவேலி ஆவரங்கால் பகுதிகளுக்கும், ரவிராஜ் கச்சாய், கோயிலாக்கண்டி பகுதிகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டுவருகின்றனர். இவ்விடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி, குடிநீர்ப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை மற்றும் விவசாயம், மீன்பிடி நடவடிக்கைகளில் எதிர்நோக்கப்படும் சிக்கல்கள் குறித்து பொதுமக்களுடன் கலந்துரையாடிவருகின்றனர்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக காணாமல்போன அனைவரையும் இறந்தவர்களாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். அரசாங்க செயலகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக செயலகத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு கொடிகாமத்தில் சிரமதானம்

(கொடிகாமம்)

கரும்புலிகள் நாளையொட்டி கொடிகாமம் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் சிரமதானப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன. மிருசுவில் வைத்தியசாலை வளாகத்தில் வன்னியன் சனசமூக நிலைய நிர்வாகிகள் சிரமதானத்தை மேற்கொண்டனர். மந்துவில் சிறி பாராதி மகாவித்தியாலயம் மந்துவில் ஆர்.சி பாடசாலை ஆகியவற்றில் வலயப்பொறுப்பாளர் தனரூபன் தலைமையில் இப்பணி இடம் பெற்றது. அல்லாரைப் பாடசாலையில் அப்பகுதி வலயப் பொறுப்பாளர் தலைமையில் மேற்படி சிரமதானப் பணிகள் இடம் பெற்றன. இந்த சிரமதான பணிகளில் மாணவர்கள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (28)

# பருத்தித்துறையில் 30குடும்பங்களுக்கு சுய முயற்சிக் கடன் வழங்கல்

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறைப் பிரதேசத்தில் வாழும் 30 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சி கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கிறன.

கடந்தகால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப் பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேச வாழ் மக்களின் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே இக் கடனுதவிகள் சமுர்த்தி வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இக்குடும்பங்களின் சுயதொழில் முயற்சிகள் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

# காணாமல் போன மோட்டார் சைக்கிள் யாழ்.அரசியல் துறையினரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 04ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரிவீதியில் செலான் வங்கிக்கு முன்பாகக் காணாமல் போன சாந்திராஜ் டிறோசன் என்பவரது NPHI 6956 இலக்கு புதிய HERO HONDA 100SS மோட்டார் சைக்கில் 02.07.2004 அன்று முத்திரைச் சந்தியடியில் வைத்து யாழ். அரசியற்துறையினரால் இலக்கத் தகடு மாற்றப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (36)

# மலசலகூடங்களை அமைக்க "யுனிசெப்" நிறுவனம் உதவி

யாழ். மானிப்பாய் மற்றும் சங்கானை ஆகிய பிரதேசங்களில் மலசலகூடங்களை அமைக்க வசதியற்ற மக்களுக்கு "யுனிசெப்" நிறுவனத்தால் மானிய உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

மேற்படி பிரதேசங்களில் உள்ள மக்கள் வாழ்விடங்களில் உரிய முறையில் சுகாதார நிலைமைகள் பேணப்படாமையால் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே இம்மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வவ் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளினது சிபாரிசின் பெயரில் மலசல கூடங்களை அமைக்க வசதி யற்றவர்களுக்கே மலசலகூடங்களை அமைப்பதற்காக வேண்டி இவ்வாறான மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. (33)

# கச்சேரியில் ராணுவ அதிகாரிகளுடன் கடற்றொழிலாளர் கலந்துரையாடல்

சாவகச்சேரி-கோயில் குடியிருப்பு லிகோரியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும், இராணுவப்பிரிகேடியர் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் குடாக் கடல் பாதை திறப்புப்பற்றி கலந்துரையாடல் லிகோரியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு ரவிச்சந்திரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கோயில் குடியிருப்பு லிகோரியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் வி.தனேஸ் அவர்கள் இப்பாதை திறப்பதன் அவசியம் குறித்து சிறிலங்காப்படை அதிகாரிகளுக்கு விபரித்துக் கூறினார். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இராணுவப்பிரிகேடியர் பாதுகாப்பு காரணங்களால் இப்பாதையைப் பயன்படுத்தத் தடைவிதித்திருப்பதாகவும் முள்வேலிகள் இராணுவக் காப்பரண்கள் இருப்பதால் இவற்றை அகற்றி மிகவிரைவில் லிகோரியார் ஆலயம் ஊடாக கடல்பகுதிக்குச் செல்லும் பாதை திறக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். இப்படியான பிரச்சினைகள் எழும்போது சிறிலங்காப் படைத்தரப்பு உறுதிமொழிகளை மட்டும் வழங்கி வருவது ஒரு சம்பிரதாய நிகழ்வாக இப்பொழுது மாறிவிட்டது என மக்கள் தெரிவித்தனர்.

# காலாவதியான உணவுப்பொருள் மட்டக்குழியில் கண்டுபிடிப்பு

காலாவதியான உணவுப் பொருட்களைச் சேமித்து வைத்திருந்த கொழும்பு மட்டக்குழி வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழங்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வர்த்தகரின் கட்டடத்தை மாநகரசபையில் பதிவு செய்யத்தவறியமைக்கு எதிராகவும் வழக்குத் தொடுத்துள்ளதாக மாநகர சபையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர் காரியாலயம் தெரிவித்துள்ளது. இதேவேளை மனித நுகர்ச்சிக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களின் இறக்குமதி குறித்து ஒருவருடத்திற்கு முன்னர் எச்சரித்துள்ள போதிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தத் தவறிவிட்டார்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

# “ஆளும் கட்சிகளின் வாக்குறுதிகளும் நிறைவேற்றலும்”

சிறிலங்காவின் அரசியல் தொடர்பில் நாட்டு மக்களின் நம்பிக்கை படுமோசமாக வீழ்ச்சி கண்டிருக்கின்றது. நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் முழுக்க முழுக்க பொது மக்களுக்காகவே என்று கோஷமிடும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்த கையோடு மக்களின் நன்மைகளைக் கவனிப்பதற்குப் பதிலாகத் தங்களின் நலனிலேயே அக்கறை கொள்கின்றனர். இது கடந்த மூன்று தசாப்தகாலமாகத் தொடரும் நிகழ்வாகும். ஐந்தாறு முறை இதில் அனுபவப்பட்ட மக்கள் தற்போது அரசியலை வெறுக்கத் தொடங்கி





விட்டனர். தற்போது நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் 50 வீதமானோர் கூட வாக்களிப்பர் என்பது சந்தேகமே. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி போன்று எதிர்க்கட்சியான ஐ.தே.முன்னணிக்குள்ளேயும் தமது செல்வாக்கு நிறைவேறுமா என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது.

கடந்த 2 வருடங்களாக ஆட்சி செய்த ஐ.தே.முன்னணி நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருதிச் செயற்பட்டது. நாட்டின் வாக்காளர்களில் அரைவாசியினரின் ஆதரவோடு ஆட்சிக்குவந்த அவர்கள் மக்களுக்கு விசேடமாக எதனையும் சாதிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதாகக் கூறினாலும் அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அரச உடைமைகளைத் தனியார் மயப்படுத்தல், அநேகமான வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்கியமை ஆகியவற்றினால் பொதுத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை இழந்த ஐ.தே.கட்சிக்கு எஞ்சியிருந்தது சமாதானத்தின் பயன் மட்டுமே. அது தொடர்பாகவும் பொதுமக்களுக்கு சரியான விளக்கமளிக்க அக்கட்சி தவறியது. அத்துடன் அக்கட்சி தோல்வியடையக் காரணமாக இருந்தது நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு வெளிநாட்டவரின் உதவியை நாடியமையாகும். இதுவரை காலடி வைக்காத ஓரிரு வெளிநாடுகளைச் சேர்ந்தோர் கிராமிய மக்களின் விவசாய நலன்களை மேம்படுத்தாது நகர்ப்புற அபிவிருத்தி பற்றி சிந்திக்கத் தொடங்கினார்கள்.

இதனை சிறில.சுதந்திரக்கட்சி -ஜே.வி.பி.கூட்டணி பெரும் குறைபாடாக காட்டிக்கொண்டு தேர்தலில் பிரச்சாரம் செய்தது. எவ்வாறாயினும் ஐ.தே.கட்சி இன்றும் இதனை ஒரு குறையென்று செல்லிக் கொள்ளவில்லை. அது சரியான அபிவிருத்திப் பணியென்றே கூறுகிறது. எனினும் மக்களின் இந்த அபிப்பிராயத்தை பெரிதாக கொள்வது சரியென்று எமக்குத் தோன்றவில்லை. ஐ.தே.கட்சியின் கடந்தகால நடவடிக்கைகள் டி.எஸ்.சேனநாயக்க, டட்லிசேனநாயக்க போன்ற தலைவர்களின் ஐ.தே.கட்சி நடவடிக்கைகளில் இருந்து வேறுபடுகிறது. குறைந்தளவு தேசியவிவசாய பொருளாதாரத்துக்கு முதலிடம் வழங்குவதில் இருந்து தற்போது ஐ.தே.கட்சி விலகிவிட்டது. சேனநாயக்க பரம்பரையின் அடிவருடிகள் எனக்கருதப்பட்ட ஜே.ஆர்,பிறேமதாஸ போன்றோர் கூட 1971 - 1983 காலப்பகுதிகளில் விவசா யத்துக்கு முக்கிய இடம் அளித்தனர். எனினும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொடிய யுத்தம் காரணமாக பொருளா தாரம் சீர்குலைந்தாலும் பின்னர் சனநாயகத்தை சீரழிக்கும் கட்சியென பாரிய குற்றம் சாட்டப்பட்டது.

எனினும் இன்று காணப்படும் நிலைமை அதனிலும் மோசமானதென விமர்சகர்கள் கூறுகின்றனர். தேர்தலில் ஐ.ம.சு.முன்னணிக்கு வாக்களித்த மக்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை வழங்கத் தவறிவிட்டதால் தற்போது நிலைமை மோசமாகி இருக்கிறது. பாராளுமன்றத்தைக் கூட்டமுடியாத அளவிற்கு மோசமாய் இருக்கிறது. பதவிக்கு வந்தும் மாதங்கள் மூன்றாகி விட்டது. ஆக பட்டதாரிகளுக்கு வேலைவழங்குதல், புகையிரத அதிகாரசபை, அரச வருமானவரி சபை என்பவற்றை நீக்குதல், தனியார் மயப்படுத்தலைத் தடுத்தல் போன்ற வாக்குறுதிகளை அளித்துள்ளதால் வறியமக்களின் செல்வாக்கை ஐ.ம.சு.முன்னணி தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

எனினும் அதன் மூன்று மாதகால அரசியலை நோக்குமிடத்து அதன் எதிர்காலம் பற்றி சிந்திக்கவே தோன்றுகிறது. பாராளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குத் தள்ளப்பட்ட இவ்அரசு சிறுபான்மைக் கட்சிகளை அதிகாரத்தினாலும், சூழ்ச்சிகள் செய்தும் பலாத்காரத்தினாலும் வசப்படுத்த முயன்று தோல்வி கண்டது. அதுமட்டுமின்றி சிறுபான்மை இனங்களின் வெறுப்பையும்பெற்றுக் கொண்டது.

கடைசியாக பிரதமரினதோ,பாதுகாப்பு அமைச்சினதோ பொலிஸ்மா அதிபரினதோ முன்னறிவித்தலின்றியும், முறையான பிடியாணையின்றியும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய முயன்று ஐ.ம.சு முன்னணி சட்டப்பிரச்சினைக் குள்ளாகியிருக்கிறது.

தற்போது உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்வதைக் காண முடிகிறது. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் “இந்த அரசுக்குள் இன்னுமொரு அரசு செயற்படுவது தெளிவாகியுள்ளது” என்று கூறியுள்ளார். இது ஆளும் கட்சியிலும் அனேகமானோருக்குத் தெரிந்த விடயமாகும். அரசின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் சனாதிபதி, பிரதமர்,சிரேஷ்ட அமைச்சர் ஆகியோரின் முன்னறிவித்தலுடனும், அனுமதியுடனும் செயற்பட வேண்டிய நிலையில் தற்போது அவை நேற்று, நேற்று முன்தினம் பாராளுமன்றில் நியமனம் பெற்ற சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் செயலாற்றப்படும் “கிச்சின் கபினட்” மூலமே நடைபெறுகின்றது என அரசுக்கெதிரான அரசியல்வாதிகள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் பெயர், முகவரிகள் கூட வழிப்போக்கர் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை தேடுவதற்காக தாம் செய்வதே சரியெனக் கூறுகின்றனர். அத்துடன் அரசியலமைப்பை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு மேலும் சிக்கலை உருவாக்குகின்றனர்.

இந்த நிலைமைகளால் தீர்க்கப்படவேண்டிய பிரதான பிரச்சினைகள் இரண்டு பின்தள்ளப்படுகின்றன. ஒன்று சமாதான முன்னெடுப்பு. மற்றது நாட்டின் பொருளாதாரம். .சந்திரிகா விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால சபையை தருவதாகக் கூறும் நிலையில் ஜே.வி.பி.யினர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர். ஆளும் கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடு காணப்படுகிறது வெளிநாட்டமைச்சர் கதிர்காமரோ அமெரிக்காவில் ஒன்றும், இந்தியாவில் ஒன்றும் கூறுகிறார். அதற்கிடையில் “கிழக்கு மாகாணத்தில் கருணா விடயத்தில் அரசு உதவி செய்கிறது ”என விடுதலைப்புலிகள் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர். அவரைக் கொழும்புக்கு அழைத்து வர ஐ.தே.கட்சி உதவியது என்பதால் ரணிலும் சிக்கலுக்குள்ளாகியிருக்கிறார். இதனால் சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. அதனால் சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் என்ற கேள்வியும் தோன்றுகிறது. அதன் விளைவாக சிறிலங்காவுக்கான வெளிநாட்டு உதவியான 45 ஆயிரம் கோடி ரூபா கிடைக்காமல் போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிதியை ஆப்கானிஸ்தான், ஈராக், சூடான் போன்ற நாடுகளுக்கு வழங்க உதவி வழங்கும் நாடுகள் சில தீர்மானித்துள்ளன நாம் சமாதான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவோமானால் மேற்படி நிதி சிறிலங்காவிற்குக் கிடைக்காமல்போய் விடு மென உதவிவழங்கும் சபை முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நிலைமை தற்போது மோசமான நிலைக்கே செல்கிறது. கடந்த இரண்டு வாரங்களுக்குள் ரூபாவின் மதிப்பு என்றுமில்லாதவாறு வீழ்ச்சி கண்டுள்ளது. இது அரசினால் தாங்கிக்கொள்ள முடியாத நிவாரணங்களை வழங்கு வதாலும், செலவுகளாலுமே ஏற்படும் ஒன்றாகும். இதற்குக் காரணம் மசகு எண்ணெய், கோதுமை போன்றவற்றின் விலைகள் வெளிநாட்டு சந்தையில் அதிகரித்தமையாகும். அந்தச் சுமையை சுமப்பவர்கள்



வறிய மக்களே.

ஒரு அரசாங்கம் பதவியேற்று 3அல்லது 4 மாதங்களில் அது எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் மக்கள் மகிழ்ச்சியடைவர். அந்த வகையில் ஐ.ம.சு முன்னணி தற்போது முன்னெடுக்கும் முக்கிய நடவடிக்கைகள் என்பதாலும், முன்னைய ஆட்சி அமுற்படுத்தவிருந்த நடவடிக்கைகள் என்பதாலும் மக்களின் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெறுவதால் இதுவிருப்பத்துக்குரிய காலப்பகுதியாகும். எனினும் தற்போது ஐ.ம.சு முன்னணியைப்பொறுத்த வரையில் இக்காலப்பகுதி அதற்கு மிகக் கடுமையாகும்.

ஏனெனில் அது பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான வருமானத்தை ஈட்டும் வழி தெரியாமல் இருக்கிறது. வரிகளை அதிகரிக்க முடியாமல் தற்போது உள்ளபடியே வைத்திருப்பது அதன் நோக்கமாகும். அத்துடன் வரவு செலவுக்கேற்ப வெளிநாட்டுக்கடன்களை மட்டுப்படுத்தவும் வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவிக்கவும் அரசு முனைகிறது.

புதிய அரசு பதவியேற்றதும் அதன் அபிவிருத்திப் பணிகள் பற்றி பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பது அவசியமாகும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லாதுள்ளது. பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லாததால் இது தாமதமாகின்றது.

வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றிபெற்று சிறுபான்மைக் கட்சிகளை இணைத்து பெரும்பான்மையை நிரூபிக்க அரசு எண்ணியிருக்கிறது. அதனாலேயே 20ஆம் திகதி வரைக்கும் பாராளுமன்ற அமர்வு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. பாராளுமன்றத் தேர்தலை வென்ற அரசுக்கு அதன் நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஓரளவு கால அவகாசம் தேவையே. அது மக்கள் ஆணையை மதிக்கும் செயலாகும். பாராளுமன்றப் பெரும்பான்மைப்போதாது விட்டால் அதனை பெறும் வழிகளை தந்திரோபாயமாக கையாள வேண்டும் ஆனால் ஏனைய கட்சிகளை அடக்கியாள நினைப்பது மடமை யாகும். இந்நிலை தொடர்ந்தால் தேவையற்ற தேர்தல் ஒன்றைமீண்டும் மக்கள் சந்திக்க நேரிடும்.

எனவே ஆளும் கட்சி எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதும் அரசியலில் மேலும் மேலும் பிரச்சினையை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்பதுமேதற்போதைய தேவையாகும்.

ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க (லங்காதீப)

தமிழில்-வீ.வடிவேல்



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# மகுடம் சூடியது கிரேக்கம்



கிறிஸ்ரியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்)

ஐரோப்பாவில் மூன்று வாரமாக கால்பந்து ரசிகர்களை தன்னகத்தே ஈர்த்து வைத்திருந்த யூரோ -2004 கால்பந்து பெரு விழாவின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றி கிரீஸ் அணி மகுடம் சூடிக் கொண்டது.

இந்தப் போட்டியில் இதுவரை இறுதிப் போட்டிக்கு முன்னேறாத போர்த்துக்கல் கிரீஸ் அணிகள் மோதின.

போட்டியை நடாத்தும் போர்த்துக்கல்லுடன் அதி ரடி அணியாக ஆரம்பம் முதலே திகழ்ந்து வந்த கிரீஸ் இறுதிப் போட்டியில் அனைவரது எதிர்பார்ப்புக்களையும் பொய்யாக்கி வெற்றிக்கம்பத்தைத் தொட்டது.

ஆரம்பம் முதலே தற்காப்பு ஆட் டத்தையும், தாக்குதல் ஆட்டத்தையும் நிகழ்த்தியது கிரீஸ் அணி. 57ஆவது நிமிடத்தில் கிடைத்த பொன்னான "கோணர்" வாய்ப்பை கோலாக மாற்றினார் ஏஞ்சலோஸ் பிறிஸ்ரோஸ் அதுவே போர்த்துக்கல்லின் தோல்விக்கும் காரணமாக அமைந்தது.

இதனால் முன்னிலை பெற்ற கிரீஸ் அணியை தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற ஆவேசத்துடன் ஆட்டத்தை மெருகூட்டிய போர்த்துக்கல் அணிக்கு கோல் போடும் பல சந்தர்ப்பங்கள் கிரீஸின் தற்காப்பு ஆட்டத்துக்கு முன்னால் எதனையும் சாதிக்க முடியாது போனது.

எப்படியாவது கிரீஸ் அணியை வெற்றி கொள்ள வேண்டும் என்ற துடிப்பு போர்த்துக்கல் வீரர்களிடம் இறுதி வரை மேலோங்கி இருந்ததை கால்பந்து ரசிகர்கள் மறந்து விடுவதற்கில்லை.

கிரீசை பொறுத்தவரை இதற்கு முன்னர் யூரோ கோப்பையிலோ அல்லது உலகக் கோப்பையிலோ ஒரு ஆட்டத்தில் தானும் அது வெல்லவில்லை என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் நூற்றுக்கு நூறு வீதம் போர்த்துக்கல் அணியே கோப்பையை வெல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டியில் தொடக்க லீக் போட்டியில் போர்த்துக்கல்லை தோற்கடித்த கிரீஸ் 44 ஆண்டுகால யூரோ கிண்ணவரலாற்றில் மாபெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இதன் பின்னரான "லீக் போட்டியில் ஸ்பெயினுடன் சமன் கண்ட கிரீஸ் காலிறுதியில் நடப்பு சம்பியன் பிரான்சை வெளியேற்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்துக்கொண்டது.



வெற்றிக்கிண்ணத்துடன் கிரீஸ்அணி

அடுத்து இப் போட்டியில் பிரமாண்டமான அணி எனப் பேசப்பட்ட செக் குடியரசை அரையிறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இந்த சுற்றுப்போட்டியின் உச்சத்தை அது அடைந்து கொண்டது.

ஏறக்குறைய 1992ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்ற டென்மார்க் அணியின் கதையைப் போன்றே கிரீசின் முன்னேற்றம் இந்த சுற்று போட்டியில் அமைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

1992ஆம் ஆண்டு போட்டிகளில் டென்மார்க் தகுதியை பெறாத நிலையில் ஏதோ காரணத்துக்காக யூகோஸ்லாவிய போட்டியிலிருந்து வெளியேறியதால் வாய்ப்பைப் பெற்ற டென்மார்க் இறுதியாட்டத்தில் ஜேர்மனியைத் தோற்கடித்து அதிசயத்தை ஏற்படுத்தியது.

அதே மாதிரியான முன்னேற்றத்தைக் கண்டுவந்த கிரீஸ் அணி லீக் ஆட்டத்தில் வென்ற போர்த்துக்கல்லையே இறுதியாட்டத்தில் சந்தித்து வெற்றி பெற்றமை வரலாற்றுச் சாதனையே.



லூயிஸ்பீகோ
(போர்த்துக்கல்)

தாயக ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவுடன் லீக் போட்டியில் பெற்ற தோல்விக்கு பழிதீர்க்கும் வகையில் இறுதிப் போட்டி அமையுமென அனை வரும் எதிர்பார்த்திருந்த வேளையில் கிரீஸ் அணி இறுதிப்போட்டியில் பெற்ற வெற்றி அதன் பலத்தை மேலும் நிரூபித்துள்ளது.

கிரீஸ் அணியில் மற்றைய நாடுகளைப் போன்று பிரபலங்கள் இல்லாது விட்டாலும், வலுவான தற்காப்பு ஆட்டத்தைப் பலமாகக் கொண்டு விளங்கியதால் கிரீஸ் அணிக்குக் கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்புக்கிட்டியது.

2004 போட்டி கனவு மாதிரி உள்ளது என்று கிரீஸ் அணி வீரர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர். அது தொடர்வதற்குப் போர்த்துக்கல் வீரர்கள் வழிவிடுவார்களா என்ற. கருத்து பரவலாக நிலவியநிலையில் வெற்றிக்கனியைப் பறித்துக்கொண்டது கிரீஸ்.

யூரோ கிண்ணப் போட்டிகளில் இதற்கு முன்னர் போர்த்துக்கல் அணி இரண்டு தடவைகள் அரையிறுதிக்கு முன்னேறி இறுதிப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தது.

இந்நிலையில் காலிறுதிப் போட்டியில் பலமான இங்கிலாந்து அணியை கடுமையான போராட்டத்திற்கு பின் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்ற போத்துக்கல், அரையிறுதிப் போட்டியில் நெதர்லாந்தை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளமையும் வரலாற்று வெற்றியே.

## ஓட்டம் எடுக்காது ஆட்டமிழந்தோர்

கிரிக்கெட் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி சாதனை புரிந்த பல வீரர்கள் உள்ளனர்.எனினும் போட்டிகளில் ஓட்டம் எடுக்காது ஆட்டமிழந்த வீரர்கள் வரிசையிலும் முதலிடம் இரண்டாமிடம் என வகைப்படுத்தப்படக் கூடியவர்களும் இருக்கவே செய்கின்றனர்.அந்த வகையில் உலகில் முதற்தர பந்து வீச்சாளரும் சாதனை வீரருமான மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கொட்னி வோல்ஷ் முதலிடத்தை வகிக்கின்றார். இவர் பங்குபற்றிய 185 இன்னிங்ஸ்களில் 43ல் பூச்சியத்தில் ஆட்டமிழந்துள்ளார்.





அடுத்ததாக அவுஸ்திரேலிய நட்சத்திரப் பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் பங்கேற்ற 152 இன்னிங்சில் 29ல் அவ்வாறு ஆட்டமிழந்துள்ளார்.

மூன்றாவதாக மேற்கிந்தியத்தீவைச் சேர்ந்த மர்வின்டிலான், 68 இனிங்ஸ்களில் பங்கேற்று 26 முறை பூச்சி யத்தில் ஆட்டமி ழந்துள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர் கிளன் மக்ராத் 104 இனிங்சில் ஆடி 26 முறை பூச்சியத்தில் ஆட்டமிழந்துள்ளார். 71 இன்னிங்ஸ்களில் ஆடி 24 முறை மேற்படி ஆட்டமிழந்தவர் நியூசிலாந்தின் டெனிமொறிஸ் ஆவார்.சிறிலங்காவின் வீரர் முரளிதரன் 115 இனிங்சில் பங்கேற்று 24 முறை பூச்சியத்தில் ஆட்டமிழந்தவராவார்.

## புதுமைகள் நிகழப் போகும் ஆசியக் கிண்ண கிரிக்கெட்

தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள் பலவுள்ளன. அவற்றுள்பண்டைய காலந்தொட்டு இரண்டு நாடுகளுக்குமேல் பங்கு பற்றும் ஒருநாள் போட்டிகள் வருடாவருடம் நடைபெறுவது இங்கிலாந்து, சிறிலங்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மட்டுமே.அந்த வகையில் சிறிலங்காவில் இன்னும் இரண்டு வாரங்களில் ஆசிய கிண்ண ஒருநாள் போட்டிகள்நடைபெறவிருக்கின்றன. 20 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இப்போட்டித் தொடரைப் பொறுத்தளவில் சிறிலங்கா முக்கிய இடம்பிடிக்கின்றது.





இத் தொடரின் முதலாவது போட்டி 1984ஆம் ஆண்டு நடைபெற்றவேளை சிறிலங்கா கிண்ணத்தைக்கைப்பற்றியது. இதற்கு முன்பு பல நாடுகள் பங்கு பற்றிய போட்டிகள் இரண்டு மட்டுமே. ஒன்று இங்கிலாந்தில் [illegible] நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டி, மற்றையது அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற "பென்சன் ஹேஜஸ்" முக்கோணத் தொடர். இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை நடைபெறும் ஆசியக் கிண்ணப்போட்டி தற்போது 11ஆவது போட்டியாக இருக்க வேண்டிய நிலையில் இது 07ஆவது போட்டியாகி விட்டது. காரணம் ஏனைய நான்கு போட்டிகளும் பங்களாதேஷில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாகவும் இந்தியபாகிஸ்தான் எல்லைச்சண்டை காரணமாகவும், ரத்துச் செய்யப்பட்டமையாகும். 1986ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியின் மறுப்பு, 90ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பகிஷ்கரிப்பு ,92ஆம் ஆண்டு இந்தியாவின் பகிஷ்கரிப்பு என்பவை உதாரணங்களாகும். இவை மண்டல நாடுகளின் அரசியல் அழுத்தங்களாகின.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் 16ஆம் திகதி சிறிலங்காவில் ஆரம்பமாகும் ஆசிய கிண்ணத்தொடர் பிரதானமாக மூன்று நாடுகளினதும் பலப் பரீட்சைக்களமாக அமையும் என்பது ஒரு புறம் இருக்க பங்களாதேஷ் அணியுடன் மேலும் டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத ஹொங்கொங் அணியும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியும் களமிறங்குவது புதிய அம்சமாகும்.

அண்மையில் டெஸ்ட் அந்தஸ்து பெறாத நாடுகள் பங்கு பற்றிய தகுதி காண் போட்டிகளில் கனடா,நெதர்லாந்து, அயர்லாந்து போன்று மேலும் சில நாடுகளையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வெற்றி கண்டுள்ளது. அப்போட்டிகளில் அவ்வணிவீரர்கள் சாதனைகளைப் படைத்தமையும் நினைவிருக்கலாம்.

அதனைவிட சிறிலங்கா அணிக்கு பயிற்சி வழங்கிய பயிற்றுனர் வட்மோரிடம் பயிற்சி பெற்றுள்ள பங்களாதேஷ் அணியும் தற்போது வளர்ச்சி கண்டுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியில் அது வெளிப்பட்டது. சிறிலங்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற பலமான அணிகள் மேற்குறிப்பட்ட ஏனைய அணிகளை இலகுவில் வென்றுவிடலாம் என்றும் மேற்சொன்ன இந்தியா போன்ற அணிகள் தத்தமக்குள் மட்டுமே பலப்பரீட்சை உள்ளதாகக் கருதலாம்.

ஆயினும் நேற்றுடன் முடிவடைந்த யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் பலமான அணிகள் கோட்டை விட பலமற்ற அணியான கிரீஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறி வெற்றியும் கண்டுள்ளது. எனவே இந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரிலும் புதுமைகள் நடக்கலாம்.

வடிவேல்

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் முஸ்லிம் பிரிவு ஆரம்பிக்கத்திட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் முஸ்லிம் பிரிவு ஒன்றை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வைபவம் ஒன்றில் உறையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுக்கிடையில் கலாசாரம் வேறாக இருக்கலாம் ஆனால் சிறுபான்மையினர் என்ற வகையில் தேர்தல்களில் கூடுதல் ஆசனங்களைப் பெறுவதன் மூலம் நாங்களே ஆட்சியை நிர்ணயிப்பவர்களாகிறோம் என்றார்.

# நடமாடும் சேவை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள காணிப் பிணக்குகள், உறுதிகள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளபடியால் அடுத்த மாதம் 1ஆம் திகதி தொடக்கம் நாடு முழுவதும் நடமாடும் சேவைகளை ஆரம்பிக்க இருப்பதாக காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# ஜெயவர்த்தனபுர பல்கலையைத் திறக்க விசேட ஏற்பாடுகளுடன் நடவடிக்கை

(கொழும்பு)

**கொழும்பு சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் இம்மாதம் 28ஆம் திகதி மீளத் திறக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

இப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புக் கட்டமைப்பில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்திற்கு வெளியே அவசர நேரங்களில் அழைக்கக்கூடிய வகையில் பொலிஸ் ரோந்துப் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

மேலும் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், தலைமைத்துவத் திறன்கள் என்பவற்றில் 150 மாணவர்களுக்கு பயிற்சியளிகப்படவுமுள்ளது.

மீளத் திறப்பது குறித்ததான மாணவர்களின் பதிலுக்காகக் காத்திருப்பதாகக் கூறியுள்ள பல்கலைக்கழக துணைவேந்தர் சண்டிம விஜேபண்டார மாணவர்கள் அரசியலில் சம்பந்தப்படுவதை எதிர்க்கவில்லை அது அவர்களின் உரிமையாயினும் அது அவர்களின் கல்விக்குத் தடையாய் இருக்கக் கூடாதென்று தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கின் காரணமாக ஒரு மாணவன் கொலை செய்யப்பட்டதையடுத்து கடந்த யூன் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் இப்பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

# கைப்பற்றப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை இலங்கை மீனவர்களுக்கு வழங்க அரசு முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் மீன்பிடிப்படகுகளின் ஒருதொகுதி, தேவைப்படும் இலங்கை மீனவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. சுமார் ஐம்பது இந்திய மீன்பிடிப் படகுகள் கடந்த இரண்டரைமாதங்களில் சிறிலங்கா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இவற்றில் தகுதியான பதினைந்து படகுகளை தேவைப்படும் இலங்கை மீனவர்களுக்குக் கையளிக்க கடற்றொழில் அமைச்சர் சந்திர சேனவிஜயசிங்க தீர்மானித் திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.உயர் நீதி மன்றத்தின் உத்தரவின் கீழ் குறித்த படகுகள் காரைநகர், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை கடற்படை முகாம்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 40 தொடக்கம் 50 அடி நீளமுடைய இந்த மீன்பிடிப்படகுகளான "ட்றோலர்"களில் சில வற்றில் இயந்திரங்களும், வேறு சிலவற்றில் உட்பகுதிகளும் நல்ல நிலையில் உள்ளன. இதேவேளை தமிழ் நாடு நீதி மன்றம் சிறையிலிருந்த 17 இலங்கை மீனவர்களையும் அவர்களது ட்றோலர்களையும் கடந்த வாரம் விடுவித்திருந்தது. குறிப்பிடத்தக்கது.

# விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்காவின் எயார்லைன்ஸ் அதன் விமானங்கள் மற்றும் நீரில் இறங்கக் கூடிய விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய விமான நிறுவனமும் மாரிகாலத்தை முன்னிட்டு மேலும் இரண்டு ஏ 320 ரக விமானங்களையும் மற்றும் ஏ-340 ரக விமானங்களையும் கொள்வனவு செய்யவுள்ளது. உள்ளூர் விமான சேவைக்கென சிறிலங்காவின் எயார்லைன்ஸ் மேலும் இரண்டு விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் இம்மாதம் சிறிலங்கா விஜயம்

(கொழும்பு

ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவொன்று இம்மாதம் 17ஆம் திகதி சிறிலங்காவிற்கான இர ண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

வெளிவிவகார அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் உப்பட முக்கிய பிரமுகர்கள் இவ்விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர். இவர்கள் தமது விஜயத்தின் போது சிறிலங்காவிற்கான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ,வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்து இருநாட்டு உறவுகள் அடிப்படையிலான பல்வேறு விடயங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளனர்.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரின் சிறிலங்காவிற்கான இந்த விஜயமானது. இந்தியா, சீனா, சிறிலங்கா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானுக்கான 10 நாள் விஜயத்தின் ஒரு அங்கமாகும்.

# எச்சரிக்கை

(கொழும்பு)

பௌத்தர்கள் மாற்று மதங்களுக்கு மாறுவதற்கு தடைவிதிக்கும் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றாவிட்டால் அதற்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடத்தப்போவதாக அமரபுர நிகாய நாயக்கர் ஞானரத்தின தேரர் கூறியுள்ளார்.

இது சிங்கள பௌத்த நாடு இந்த நாட்டில் பௌத்தர்கள் வேறு மதங்களுக்கு மாறுவதை சட்டப்படி தடை செய்ய வேண்டுமென அவர் மீண்டும் கூறியுள்ளார்.

# சிறிலங்கா தேசியப் பூங்காவின் ஒரு பகுதி தீ விபத்தினால் எரிந்து அழிந்தது

(கொழும்பு)

சிறிலங்காவில் இடம்பெற்ற மற்றுமொரு தீவிபத்தில் தேசியப் பூங்கா ஒன்றின் பெரும்பகுதி எரிந்து அழிந்துள்ளது

சென்ற புதன் கந்துல்ல தேசியப் பூங்காவில் சில இனந்தெரியாதோரால் மூட்டப்பட்ட தீயினால் பூங்காவின் சுமார் 1200 ஏக்கர் பகுதி எரிந்து அழிந்துள்ளதாகவும், யானை உட்பட பெரிய விலங்குகள் அவ்விடத்தை விட்டுத்தப்பியோடி வருவதாகவும், முயல், மான் போன்ற சிறிய விலங்குகள் பெருமளவில் எரிந்து போயிருக்கலாமென நம்பப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

உல்லாசப்பயணிகள் தமது பாதுகாப்புக் கருதி பூங்காவின் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கந்துல குளத்தில் மீன் பிடிக்க வந்த சிலரே இத் தீயிற்கு காரணமாயிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

# ஓய்வூதியம் வழங்கலில் மாற்றம்

(கொழும்பு)

தற்பொழுது வங்கிகளில் வழங்கப்படும் ஓய்வூதியம் பெறுபவர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்குவதால் அவர்களின் நலன்கருதி மாவட்ட ரீதியாக இவ் ஓய்வூதியத்தை வழங்குவதற்கு சிறிலங்காவின் உள்ளூராட்சி அமைச்சர் அமரசிறி தொடங்கொட தீர்மானம் எடுத்துள்ளார்.

இதற்கெனப் பட்டதாரிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. இனி ஓய்வூதியம் பெறுபவர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருக்காது எனக் கூறப்படுகின்றது.

# 11,500 கண்காணிப்பாளரை 'பவ்ரல்' அமைப்பு ஈடுபடுத்தும்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலின் போது 11,500 கண்காணிப்பாளர்களைக் கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக "பவ்ரல்" அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு ஒரு கண்காணிப்பாளர் என்ற முறையில் 10,000 நிலையங்களில் இவர்கள் ஈடுபடுவார்கள் எனவும், ஏனையோர் இடத்திற்கிடம் செல்லும் கண்காணிப்பாளர்களாக கடமையாற்றுவார்களெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


பிறந்தநாளும் 9 ஆம்ஆண்டு நினைவஞ்சலியும்

ஜனனம் - 06 . 07 . 1975



வீரமரணம் - 06 . 07 . 1995

2 ஆம் லெப். யோகலிங்கம்

(சுப்பிரமணியம் –சிவகுமார்)
236 சில்வா வீதி வட்டக்கச்சி

தங்கத் தலைவன் வழி–இணைந்து
உலகத்தமிழன் மானம் காக்க
எதிரி படை களம்நோக்கி--உற்ற கனவு
தோள் சுமந்து புலிப்பாச்சல்– என்று
அண்ணா நீங்கள் விட்டுச் சென்ற
உன் கனவோடு நாம் நடக்கின்றோம்– எம்
தாகம் தீருமா?...

உங்கள் நினைவில்
அம்மா,பெரியண்ணா, பெரியண்ணி
சின்னண்ணா,சின்னண்ணி, தங்கை மற்றும்
பெறாமக்கள்

(4771)


# இரு பாராளுமன்றக் குழுக்களின் தலைமைப் பதவி எதிர்க்கட்சிகளுக்கு

## அரசைத் தக்கவைக்க முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் 02 குழுக்கள் தொடர்பான தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளியாகியுள்ள தகவல்களையடுத்து விளக்கமளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பிரதானமான கணக்குகளைப் பேணும் குழுவிற்கான தலைமைப் பதவிமற்றும் [illegible], உயர்பதவிகளை மீள் பரிசீலனை செய்யும் குழுவுக்கும் தலை மைப்பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே தான் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டிருந்ததாகக் கூறிய அவர் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியினரே இந்தப் பதவிக்குத் தலைமை தாங்கியதாகச் சுட்டிக்காட்டினார். (32)

# குறைந்த விலையில் மாவைப்பெற முயற்சி

(கொழும்பு)

பிறிமா நிறுவனத்தின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குறைந்த விலையில் கோதுமை மாவை இந்தியா, நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தனியார் நிறுவனங்கள் தனது அமைச்சுக்கு விண்ணப்பங்கள் செய்துள்ளதாக வாணிபத்துறை அமைச்சர் பர்னாந்து புள்ளே தெரிவித்துள்ளார்.

# 4 மாநில ஆளுநர்கள் பதவி நீக்கம்; எதிர்த்து பா.ஜ.கட்சி போராட்டம்!

**மத்திய அமைச்சரவையில் 'கறைபடிந்த' அமைச்சர்கள் இடம் பெற்றிருப்பதையும் 04 மாநில ஆளுநர்கள் நீக்கப்பட்டதையும் எதிர்த்து நாடு முழுவதும் இன்று முதல் ஒரு வாரகாலம் போராட்டம் நடத்தப் போவதாக பா.ஜ.கட்சி அறிவித்துள்ளது.**

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி, பா.ஜ.கட்சித் தலைவர் வெங்கையாநாயுடு ஆகியோர் பங்கேற்பார்கள் என்று அக்கட்சியின் துணைத்தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி நேற்று முன்தினம் நிபுணர்களிடம் கூறினார். மேலும் அவர் கூறியுள்ளதாவது, ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்டவர்களாக இருப்பதால் ஆளுநர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் கூறியுள்ளது 'சிறுபிள்ளைத்தனமானது. அரசியல் அமைப்பையும், சனநாயக மரபுகளையும் மத்திய அரசு திட்டமிட்டுக் குலைக்கிறது என்பதையே இது காட்டுகிறது. பல்வேறு அதிகாரமையங்களின் உத்தரவுகளின் படி செயற்படும் பொம்மை அரசு அதன் சூப்பர் தலைவர்களின் விருப்பங்களை நிறைவேற்ற மிகவும் அவசரம் காட்டுகிறது. 'பொடோ' சட்டத்தை ரத்துச் செய்வது 'கறைபடிந்த' அமைச்சர்களை நீக்க மறுப்பது ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் குறைந்துவிட்டது என்று பட்டீல் சொல்லியிருப்பது அரசின் புள்ளி விபரத்துக்கும் நடைமுறை உண்மைகளுக்கும் எதிரானது. கடந்த மாதம் மட்டும் 24இற்கும் மேற்பட்ட ஊடுருவல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. பல அப்பாவிப் பொதுமக்களும், இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டுள்ளனர். குறுகிய அரசியல் இலாபத்துக்காக மத்திய அரசு பல சனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதை எதிர்த்து நாடு முழுவதும் பா.ஜ.க. போராட்டம் நடத்தும் "பாராளுமன்றத்தில் இருந்து வீதிக்கு" என்று அந்தப் போராட்டத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இப்போராட்டத்தில் நாட்டின சுய மரியாதையையும், பாதுகாப்பையும், சனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற முழக்கம் எழுப் பப்படும். இம்மாதம் 6ஆம் திகதி தொடக்கம் போராட்டம் சனசங்கத்தின் முக்கிய ஆசானான ஷியாமா பிரசாத் முகர்ஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்களோடு இணைந்து நடத்தப்படும் என்றார் நக்வி.

# கூட்டணி அரசை எச்சரிக்கிறார் அத்வானி

நான்கு மாநில ஆளுநர்களை நீக்கியதால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே..அத்வானி ஆளும் கூட்டணி அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

காந்தி நகரில் பா.ஜ.கட்சி தொண்டர்களிடம் நேற்றுமுன்தினம் அவர் பேசியதாவது; நான்கு மாநில ஆளுநர்களை நீக்கியது. அரசியல் குழு மனப்பான்மையைக் காட்டுகிறது. இச்செயலால் அரசை கிரிமினல் மயமாக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு இன்னொரு அத்தியாயத்தை சேர்த்துள்ளது. ஆளுநரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் என்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் விரும்பும் வரையில் ஆளுநர் பதவியில் நீடிப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. பிரதமர் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பெயரில் தான் நீடிக்கிறார்கள் என்று முன்பு கூறப்பட்டது. இதுபோன்ற தவறான விளக்கங்கள் சனநாயகத்துக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்றார். அத்வானி இக்கூட்டத்தில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடியும், அமைச்சர்கள், எம்.எல் ஏக்கள் மாநில பா.ஜ.கட்சித் தலைவர்களில் ஒருவரான ராஜேந்திரசிங் ராணா, முன்னாள் முதல்வர் சுரேஸ்மேத்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மாநிலங்களவை உறுப்பினர்கள் நேற்றுப் பதவி ஏற்றனர்

(புதுடில்லி)

மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுள்ளனர். மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல், மாநிலங்களவை எதிர்க்கட்சித்தலைவர் ஜஷ்வந்சிங் வி.ஜே.பி.தலைவர் எம்.வெங்கையா நாயுடு காங்கிரஸின் மூத்த தலைவர் அம்பிகாசோனி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரும் அ.இ.அ.தி.மு.க.வின் சார்பில் நான்கு உறுப்பினர்களும், காங்கிரஸின் சார்பில் ஒருவரும் வி.ஜே.பியின் சார்பில் மத்திய பிரதேச சட்டப் பேரவையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழத்தைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.திருநாவுக்கரசும் கர்நாடக சட்டப்பேரவையில் இருந்து மதசார்பற்ற ஜனதாவின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக தொழிலதிபர் எம்.ஏ.எம் இராமசாமியும், பகுஜன் சமாஜக் கட்சியின் தலைவர் மாயாவதியும் திரைப்பட நடிகர் ஜெயாபாதுரியும் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்று உறுதிமொழி எடுத்துள்ளனர்.

## வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடர்

(சென்னை)

புதுவை சட்டப்பேரவையின் வரவு-செலவுத்திட்ட கூட்டத்தொடர் புதுவை துணைநிலை ஆளுநர் எல்.என். ஜாவின் உரையுடன் நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது. சுமார் மூன்று வாரகாலம் இக்கூட்டத்தொடர் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நிதியமைச்சர் பொறுப்பை வகிக்கும் முதலமைச்சர் என். ரங்கசாமி இன்று நடப்பாட்டிற்கான நிதிநிலை அறிக்கையினை அவையில் தாக்கல செய்வா் எனத் தெரிவிக்கப்பட்டுளளது.

# குஜராத் விவகாரத்தால் நான் ஓரங்கட்டப்படவில்லை உறுதிபடத் தெரிவிக்கின்றார் வாஜ்பாய்

குஜராத் விவகாரத்தில் பாரதிய ஜனதாக் கட்சியிலிருந்து நான் ஓரங்கட்டப்படவில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார் முன்னாள் பிரதமர் வாஜ்பாய். உத்தரப் பிரதேசத்தில் தாம் போட்டியிட்டு வெற்றி பெற்ற லக்னோ மக்களவைத் தொகுதியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் அவர் கூறியதாவது; மக்களவைத் தேர்தலில் தேசிய சனநாயகக் கூட்டணியின் தோல்விக்கு குஜராத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமல்ல. தேர்தலில் பா.ஜ.க. எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன் தோல்விக்கு குஜராத் சம்பவங்களே காரணம் என்று கூறப்படுவதை நான் ஏற்கனவே மறுத்துள்ளளேன். மக்களவைத் தேர்தலுக்கும், குஜராத் வன்முறைகளுக்கும் எந்தவித தொடர்புமில்லை. பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்தே தேர்தலில் கட்சிகள் போட்டியிட்டன மலிவான பிரச்சாரத்தின் மூலம் குஜராத் சம்பவங்களை தங்களுக்கு ஆதரவாக எதிர் அணியினர் பயன்படுத்திக் கொண்டுவிட்டனர். பா.ஜ. கட்சி தோல்விக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன அதில் ஒன்றுதான் கட்சிக்கிருந்த நல்லெண்ணத்தைக் குலைக்கும் விதத்தில் எதிர் அணியினர் மேற்கொண்ட பிரச்சாரம் குஜராத் விவகாரத்தை தேர்தல் பிரச்சினையாக பா.ஜ.கட்சி ஒரு போதும் ஆக்கியதில்லை. கோத்ராவில் ரயில்எரிப்புச் சம்பவங்கள் நடைபெறாமல் இருந்திருந்தால் அதற்கு பிந்திய வன்முறைகள் தலைதூக்கியிருக்காது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பிரச்சினை தேவையின்றி பெரிய விவகாரமாக ஆக்கப்பட்டு விட்டது. சமீபத்தில் மோடி என்னைச் சந்தித்தார் வன்முறையை அனுமதிக்கவில்லை தடுப்பதில் மாநில அரசு எந்தத் தருணத்திலும் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கவில்லை என்று அப்போது அவர் விளக்கினார். இருந்தபோதிலும் குஜராத்தில் நடைபெற்ற சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கத் தக்கவை மனித உணர்வுகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய அடி இச்சம்பவத்தை பா.ஜ.கவின் போட்டியாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு விட்டனர் என்றார் வாஜ்பாய்.

## பாதுகாப்பு அதிகரிப்பு

(திருவனந்தபுரம்)

கேரள மாநில விமானநிலையங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கேரள மாநிலத்திலிருந்து வளைகுடா நாடுகளுக்குப் புறப்படும் பயணிகள் விமானத்தைக் கடத்திச் செல்ல சில தீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன என்று இரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து, அந்த மாநிலத்தின் விமான நிலையங்களின்பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணுலகிற்கு | | விண்ணுலகிற்கு |
|---|---|---|
| 19 - 03 - 1925 |  | 19 - 07 - 2003 |

அமரர்

**வைத்திலிங்கம் செல்லையா**

**(இளைப்பாறிய அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்ககிளை முகாமையாளர்)**

**திதி: 07.07.2004**

ஓராண்டு என்ன ஓராயிரம்
ஆண்டுகள் கடந்தாலும்
எம் நினைவுகளில் கலந்திருக்கும்
அன்புத்தந்தையின் ஆத்மா
சாந்தியடைய வேண்டுகின்றோம்.

சதானந்தா வீதி,
அளவெட்டி மத்தி.

குடும்பத்தினர்.

(4777)



# முக்கிய அறிவித்தல்

**மணல் அகழ்வு-மாந்தை கிழக்கு பிரதேச சபைப்பிரிவு, பாண்டியன்குளம்.**

**பின்வரும் இடங்களில் மாத்திரம் மணல் அகழ்வு செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.**

01. கல்லிருப்பு,
02. பறங்கி ஆறு,
03. வவுனிக்குளம்.

இவ்விடங்களில் மணல் ஏற்றுவதற்கு முன், மாந்தை கிழக்கு பிரதேச சபையில் கீழ் குறிப்பிட்டவாறு, உரிய கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| | |
|---|---|
| உளளூர் தேவைக்கு உழவு இயந்திரம் ஒரு லோட் | - 50/= |
| பிரதேச சபை எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல உழவு இயந்திரம்ஒரு லோட் | - 100/= |
| பிரதேச சபை எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல பாரஊர்தி(உழவு இயந்திரம்-03) | - 300/= |
| பிரதேச சபை எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல பாரஊர்தி (உழவு இயந்திரம் -04) | - 400/= |

இப்பற்றுச்சீட்டினை பரிசோதனை செய்வதற்கான அதிகாரம் காவல்துறை உறுப்பினர்கள், கிராம அலுவலர், பிரதேச சபை அலுவலர், நிர்வாகசபை அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாது மணல் ஏற்ற முயற்சித்தல், வீதியில் கொண்டு செல்லல், ஆகியவற்றிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல் அகழ்வு சட்டவிரோதமானதாகும்.


பிரதேச சபைப் பற்றுச்சீட்டின்றி மணல் ஏற்றப்படுமிடத்து ரூபா 2000/- தண்டப்பணமும், தடைசெய்யப்பட்ட இடங்களில் மணல் ஏற்றுவோருக்கு ரூபா 5000/- தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறுவனங்களும், பொது மக்களும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி சா. ஸ்ரீஸ்கந்தராசா,
விசேட ஆணையாளர்,
மாந்தை கிழக்கு பிரதேசசபை,
பாண்டியன்குளம்.

(சி-9875)

வெற்றிதந்த மகிழ்வில் கிரீஸ் அணியினர்









- யூரோ- 2004 கால்பந்து இறுதிப்போட்டி -

# போர்த்துக்கல்லின் கனவை கலைத்து கிரீஸ் அணி வரலாறு படைத்தது

போர்த்துக்கல்லில் நடைபெற்று வந்த யூரோ-2004 கால்பந்து சம்பியன் பட்டத்தை கிரேக்கம் சுவீகரித்துக்கொண்டது.

கால்பந்து போட்டிகளில் உலகக் கிண்ணப் போட்டிக்கு அடுத்தபடியாக ரசிகர்களின் மனதில் இடம் பிடித்திருப்பது "யூரோ" என்று



அழைக்கப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான கால்பந்து போட்டியாகும்.

இந்த ஆண்டு இப்போட்டிகள் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் கடந்த மாதம் தொடங்கின.

ரசிகர்கள் மிகவும் எதிர்பார்த்திருந்த பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற பிரபல அணிகளெல்லாம் தோல்வி அடைந்து ஒவ்வொன்றாக போட்டியிலிருந்து வெளியேற போட்டியை நடாத்தும் போர்த்துக்கல்லும் சாதாரண அணியான கிரேக்கமும் இறுதியாட்டத்துக்கு முன்னேறின.

நேற்று அதிகாலை இறுதியாட்டம் பரபரப்பாக நடைபெற்றது. முதல சுற்றில் போர்த்துக்கல் அணியையும் கால் இறுதியில் நடப்புச் சம்பியன் பிரான்சையும் அரையிறுதியில் பிரபல செக்குடியரசு அணியையும் தோற்கடித்து கிரீஸ் இறுதிப் போட்டியில் களமிறங்கியது.


மறுமுனையில் முதல் சுற்றில் கிரீஸ் அணியையும், கால் இறுதியில் இங்கிலாந்து அணியையும், அரையிறுதியில் நெதர்லாந்து அணியையும் தோற்கடித்து போர்த்துக்கல் அணி இறுதிப் போட்டிக்குப் பிரவேசித்திருந்தது.

போட்டியின் முதல் பாதியில் இரண்டு அணிகளினாலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை.

இடைவேளையின் பின் போட்டி ஆரம்பித்து 57ஆவது நிமிடத்தில் ஏஞ்சலோஸ் மரிஸ்ரியாஸ் தலையால் தட்டி கோல் ஒன்றை அடித்து கிரீஸ் அணியை முன்னிலையில் நிறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டு கிரேக்க கோல் எல்லையை ஆக்கிரமித்த வண்ணம் இருந்த போர்த்துக்கல் அணியின் கோல் போடும் வாய்ப்புக்கள் பல தவறிப்போனது.

குறிப்பாக, கிரீஸ்ரியானோ ரொனால்டோவின் முயற்சிகள் அதிர்ஷ்டமின்றி தவறிப்போயின.





இறுதியில் 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் கிரீஸ் அணி வெற்றியீட்டியது.

இம்முறை சுற்றுப் போட்டிக்கு முன்னர் பெரும் சுற்றுப்போட்டிகளில் ஒரு போட்டியில் தானும் வெற்றிபெற்றிராத கிரீஸ் அணியின் இந்த வெற்றி கிரேக்க விளையாட்டு வரலாற்றிலே மிக உயர்ந்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளது

2000ஆம் ஆண்டில் அரையிறுதிக்குத் தெரிவாகி தோல்வியைத் தழுவியிருந்த போர்த்துக்கல் அணிக்கு தாயக ரசிகர்கள் முன்பாக சம்பியன் பட்டம் வெல்லும் கனவு கைகூடாது போனது.


இந்த மகத்தான வெற்றியை கிரேக்க ரசிகர்கள் மகிழ்ச்சி பொங்கக் கொண்டாடிவருகின்றனர்.

இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் எதென்சில் கூடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தோல்வி தந்த துயரத்தில் போத்துக்கல் அணியினர்











# அவுஸ்திரேலியாவிற்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா பெரும் சாவலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்

-மத்தியூ கெய்டன்



சிறிலங்கா அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ளும் அவுஸ்திரேலிய அணியில் மூன்று முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெறுவார்கள் என்றும், இதனால் சிறிலங்கா அணி பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று அவுஸ்திரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ கெய்டன் தெரிவித்துள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான விளையாட்டு மைதானத்தில் அவுஸ்திரேலியாவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான கிளென் மெக்ராத், கிளெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோரின் பந்து வீச்சை சிறிலங்கா அணி எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கெய்ன்ஸ் மைதானத்தில் வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் தலைசிறந்த அணி-முன்னாள் வீரர்கள் அணி; கலந்து கொள்ளும் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில்

உலகின் தலை சிறந்த அணியாக கருதப்படுகின்ற அணிக்கும் உலகின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் 11 பேர் அணிக்கும் இடையில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் சுற்றுப்போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி ஆறுநாள் கொண்ட டெஸ்ட் போட்டியாகவும், இது தவிர உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டியாகவும் இது அமையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 5,6, 9ஆம், திகதிகளில் இந்தச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து ஒக்டோபர் 13ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை ஆறுநாள் டெஸ்ட் போட்டி இடம் பெறவுள்ளது.

# பந்து வீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும் முழுத்தகுதியுடன் இருக்கவேண்டும்

இங்கிலாந்தின் முன்னாள் தலைவர் போல்காட்

பந்து வீச்சாளர்களும் துடுப்பாட்ட வீரர்களும் முழுத்தகுதியுடன் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் ஜப்ரிபோல்காட் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நேற்று சென்னை சென்ற அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விளையாட்டு உத்திகள் பற்றி வீரர்களிடம் நடத்திய ஆலோசனை இரகசியமாக வைக்கப்படுமென்று அவர் கூறினார்.

ஆசிய கோப்பை போட்டியுடன் இல்லாமல் எதிர்காலப் போட்டிகள் அனைத்தையும் மனதிற் கொண்டு திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று வீரர்களை அவர் கேட்டுக்கொண்டார். அவுஸ்திரேலியாவையும் தென்னாபிரிக்காவையும் வெற்றிகொள்ளும் அணியாக இந்திய அணி திகழும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். இந்திய பந்து வீச்சாளர்கள் அடிக்கடி காயமடைவதிலிருந்து தங்கள் உடற் தகுதியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் போல்காட் யோசனை கூறினார்.

- நட்வேட்ஸ் முக்கோண ஒரு நாள்போட்டி -

# இங்கிலாந்து அணியை வீழ்த்திய நியூசிலாந்து அணி முன்னிலையில்



"நட்வேட்ஸ்" கிண்ணத்துக்கான மும்முனை ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியை நியூசிலாந்து தோற்கடித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நியூசிலாந்து 06 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.


இந்தத் தொடரில் நியூசிலாந் இதுவரை ஐந்து போட்டிகளில் விளையாடி மூன்று வெற்றிகளுடன் மொத்தமாக 22 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுக்கள் நான்கு போட்டியில் விளையாடி ஒரேயொரு போட்டியில் மாத்திரம் வெற்றிபெற்று பத்துப் புள்ளிகளைப் பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்தில் இங்கிலாந்து 5 போட்டிகளில் விளையாடி ஒரேயொரு போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளன. மூன்று போட்டிகளில் தோல்வியடைந்து பத்துப் புள்ளிகளை மாத்திரம் பெற்றுள்ளது.

இதன் மூலம் நியூசிலாந்து அ்ணியும் மேற்கிந்திய தீவுகள் அணியும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகலாம் எனக்கருதப்படுகிறது.


# விம்பிள்டனில் 21ஆவது பட்டம் வெல்லும் நவரத்தினலோவாவின் கனவு தகர்ப்பு



விம்பிள்டனில்21வது பட்டத்தை வென்று சாதனை படைக்க வேண்டும என்ற மூத்த வீராங்கனை மார்டினா நவரத்தின லோவாவின் கனவு தகர்க்கப்பட்டது. 47வயதாகும் நவரத்தினலோவா இதுவரை விம்பிள்டனில் 20 பட்டங்களை வென்று பில்லி ஜீன்கிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார். இந்த ஆண்டு மற்றொரு பட்டம் வென்று அச்சாதனையை முறியடிக்க வேண்டும் என்று களத்தில் இறங்கினார். ஒற்றையர் போட்டியில் இரண்டா வது சுற்றிலேயே வெளியேறினார். அதையடுத்து இந்தியாவின் வியாண்டர் பயஸுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாடினார். ஆனால் 3ஆவது சுற்றில் இந்த ஜோடி வெளியேறியது. மகளிர் இரட்டையர் போட்டியில் அவர் சகநாட்டு வீராங்கனை விசாரேமண்டுடன் இணைந்து போட்டியிட்டார். ஆனால இந்த அமெரிக்க ஜோடி அரை இறுதியில் தோல்வியடைந்தது. தென் ஆபிரிக் காவின் லீசல்ஸுபர், ஜப்பானின் ஆய்சுகியாமா ஜோடியிடம் 7-6 (7-4), 7-5 என்ற கணக்கில் நவரத்தின லோவா ஜோடி தோல்வியடைந் தது. மனம்தளராத நவரத்தின லோவா :47வயதிலும் இளம் வீரர்களுக்கு சவால்விடும் வகையில் விளையாடிவரும் நவரத்தின லோவா இத்தோல்வியால் மனம் தளரவில்லை. விம்பிள்டனில் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஆண்டு விளையாடினேன். ஆனால் அது முடியவில்லை. இருப்பினும் கடைசியாகப் பங்கேற்க உள்ள ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல முயற்சிப்பேன் என்கிறார்.

விளையாட்டு

## சிந்தனைக்கு



எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்; எமது இனத்தின் ஆன்மா.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

# இராணுவத்தின் அரசியல்?

அரசியல் வாதிகளின் செயற்பாடுகளினால் தற்போது பேச்சு வார்த்தைகளும், இராணுவத்தரப்பு-புலிகள் சந்திப்புக்களும் தடைப்பட்டுள்ளதாக புதிதாக இராணுவத் தளபதி பொறுப்பை ஏற்றுள்ள லெப் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளமை சற்று ஆச்சரியம் அளிப்பதாகவே உள்ளது. ஏனெனில் இராணுவத்தளபதி ஒருவர் சமாதானம் குழப்பத்திற்கு உள்ளாகியமைக்கு அரசியல் வாதிகளே பொறுப்பு என குற்றம் சாட்டுவது அரசியல் வழிமுறையில் சற்று மாறுபட்டதொன்றே. மாறாக இராணுவமும் அரசியல் நடத்த முனைகின்றதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதும் ஆகின்றது.

· புதிய இராணுவத் தளபதியின் இக்குற்றச்சாட்டானது தவறானது என்றோ அன்றி இராணுவத்தரப்பின் செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கவோ அன்றி அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான மார்க்கமாகவோ கொள்ளத்தக்கதொன்றல்ல. சமாதான முயற்சிகளுக்கு எதிரான இராணுவத்தரப்பின் பங்களிப்பு எத்தகையதாக இருப்பினும் அரசியல் வாதிகளே சமாதான முயற்சிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளனர் என்பதும் நிதர்சனமானதே.

இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றவர். இதன் காரணமாக சமாதான முயற்சியில் ஆர்வம் கொண்டவராக அவர் தன்னை வெளிக்காட்டலாம். இதற்காக இவர் புத்தரின் வழியில் செல்பவர் என்றில்லை இவர் கிழக்கு மாகாணத்திற்கு அண்மையில் இணைப்பதிகாரியாக நியமனம் பெற்ற பின்னரும் அங்கு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதுண்டு.

ஆனால் அதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகள் குழப்பமடைந்துள்ளமைக்கு காரணம் அரசியல்வாதிகளின் செயற்பாடே என்ற குற்றச்சாட்டு நிராகரிப்பதற்கில்லை சந்தேகத்திற்குரியதொரு நபர் கூறுகின்றார் என்பதற்காக உண்மைகள் பொய்யாகி விட மாட்டாது

மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட சமாதானப் பேச்சு வார்த்தைகள் குழப்பமடைந்தமைக்கு அரசியல் வாதிகளே காரணம் எனக் கூறினாலும் அதற்கு யார் யார் பொறுப்பு என அவர் கூறவில்லை. அதாவது ஒரு கட்சி மீதோ அன்றி தனியார் யார் என்றோ கூறவில்லை ஆகையினால் அவர் தற்போதைய சூழ்நிலைக்கு அனைத்து அரசியல் வாதிகளையும் கூறுகின்றாரா? அன்றித் தனி நபர்களை கூறுகின்றாரா? என்பன உறுதியிட்டுக் கூறிவிடமுடியாது. ஆனால், அவரின் கூற்றுகள் பன்மையில் இருப்பதினால் பலரை அவர் குறிப்பிடுகிறார் என்று மட்டும் கூறலாம்.

ஆனால், மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட யார் எனக் குறிப்பிடாதுவிட்டாலும் அது ஆளும் தரப்பினர் மீதான குற்றச் சாட்டாகவே கொள்ளத்தக்கதாகவுள்ளது. ஏனெனில், தற்போதைய பேச்சுவார்த்தைகள் குழப்பத்திற்குள்ளாகியுள்ளமைக்கு ஆளும் ஐ.ம.சு.முன்னணியே காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்ததென்று. அதிலும் குறிப்பாக, ஜே.வி.பி.யின் நிலைப்பாடானது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவானதாக இல்லை.

இன்றைய சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பினால்கூட அவரால் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான அணுகு முறைக்கு ஜே.வி.பி.யிடம் இருந்து பலமான எதிர்ப்பு ஏற்கனவே வெளிக் கிளம்பி இருந்தது. இந்நிலையில், ஜே.வி.பி.யின் நிலைப்பாடு காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன அன்றிக் குழப்பத்திற்கு உள்ளாகின.

இந்நிலையில், சாந்த கொட்டே கொடவின் கருத்துக்கள் ஜே.வி.பி.யை மட்டும் குறிக்கின்றதோ அன்றி சமாதானத்திற்கு விரோதமாகச் செயற்பட்ட அனைத்துச் சக்திகளையும் குறிக்கின்றதோ இதில் எதுவாக இருப்பினும் சரி, அரசியல்வாதிகளை அவர் குற்றம் சாட்டுகின்றார் என்பதே வெளிப்படையானது. இதேவேளை, இக் குற்றச்சாட்டைச் சந்த கொட்டேகொட பொதுப்படையாகக் கூறுவது கூட ஒருவகையில் பொருத்தப்பாடானதே.

ஏனெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகளுக்குத் தற்பொழுது வெளிப்படையாக முட்டுக்கட்டை போடுவது ஜே.வி.பி. மட்டும் தான் என்பதல்ல. இவ்வாறான செயற்பாடுகள் கடந்த காலத்தில் இரண்டு பிரதான கட்சிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே. கடந்த காலத்திலும் ஒரு கட்சி பேச்சுவார்த்தை நடத்தின் அதனை மற்றைய கட்சி எதிர்ப்பதும், ஒருகட்சி ஒரு உடன்பாடு கண்டல் மற்றைய கட்சி அதனை நிராகரிப்பதும், அதற்கும் மேலாக உடன்பாடு செய்த க்ட்சியே அதனைக் கிழித்தெறிவதும், மீறுவதும் சாதாரண நிகழ்வுகளாகவே இருந்தன.

ஆகையினால், சாந்த கொட்டேகொடவின் கூற்றுக்களில் தவறுகள் இருப்பதாக இல்லை. ஆனால், தற்போதைய சூழ்நிலைகளில் ஆயுதப் படைத்தரப்பு இவ்வாறு கூறிக்கொள்வதினால் சமாதான முயற்சிகளுக்கு எதிரான தமது பங்களிப்பை அவை முடிமறைத்துவிட முடியாது. அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்குத் தடை ஏற்படுத்துகின்றனர் என்றால், இராணுவத் தரப்பு சமாதானத்திற்கான சூழலையே குழப்பியடிப்பவர்களாக உள்ளனர். அதாவது, சமாதானத்திற்கு அடித்தளமாகவுள்ள யுத்த நிறுத்தத்தையே கேள்விக்குள்ளாக்கும் நிலையில் உள்ளனர். இதில் சமாதானத்திற்கு எதிராக யார் பங்களிப்பு அதிகம் என்பதே ஆய்விற்குரியது. சமாதானத்திற்கு பங்காற்றுபவர்கள் யார் என்ற கேள்விக்கே இடமில்லை.

# சிங்கள தேசம் போரைத் திணித்தால் நாம் விடுதலையை வென்றெடுப்போம்

### கரும்புலிகள் நிகழ்வில் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ்

சிங்களதேசம் போரைத் திணித்தால் நாம் விடுதலையை வென்றெடுப்போம். இவ்வாறு மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு பழுகாம பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்:

சிங்கள தேசம் யுத்தம் ஓய்ந்த காலத்திலேயே மீண்டும் யுத்தத்தைத் திணிக்க முயன்றால் எமது தேசியத்தலைவரின் செயற்பாடுகளூடாக நாங்கள் நிச்சயம் விடுதலையை வென்றெடுப்போம். தமிழர் தாயகத்தை முதற்கட்டமாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதே தேசியத் தலைவரின் நோக்கமாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கட்டமைப்பை சிங்கள அரசு ஏமாற்றிக் காலத்தைக் கடத்தி வருகின்றது.

இது தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றமடையச் செய்யும் நடவடிக்கையாகும்.

இவ்வாறு தொடர்ச்சியாக சிங்கள அரசு ஏமாற்ற நினைத்தால் சிங்கள அரசுகளின் தவறுகள், பிழைகளைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவோம்.

நாங்கள் மிகவும் பலமாகவும் வலுவாகவும் இருக்கின்றோம். இதன் காரணமாகத்தான் எங்களது பலத்தைச் சிதைக்கவே வேறு சதிமுயற்சிகள் நடைபெறுகின்றன. இதனைஅனைவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

எமது போர் ஆரம்பித்த காலந்தொட்டு இன்றுவரை பலதுரோகச் செயல்களும் துரோகிகளும் தடைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தடைகளை எமது தேசியத் தலைவர் அவர்கள் உடைத்தெறிந்து இன்று தமிழீழத்தை நோக்கிய நகர்விலே நகர்ந்து கொண்டிருக்கிறார்.

எங்களுடைய தேசியத் தலைவரின் காலத்திலே நிச்சயமாக நாம் விடுதலை பெறுவோம்.

எமது தேசியத்தலைவரை பொறுத்தமட்டில் அவர் ஒரு சாதாரணமான மனிதப்பிறவியல்ல. ஏனெனில் தமிழர்களுக்காக விடுதலை பெற்றுக்கொடுக்க எங்களுக்கு ஓர் தலைமைத் துவத்தை இவர் எங்களுக்குக் கொடுத்துள்ளார்.

நாங்கள் எமது தேசியத் தலைவரை சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் வித்தியாசமான புதுமைக ளைக் காண்போம். அந்தத் தலைவர் தான் இன்று எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்றார் அவர்.

# மட்டக்களப்பு சம்பவம் குறித்து அரசாங்கம் கவலை தெரிவிப்பு

மட்டக்களப்பில் நேற்றுக்காலை நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து அரசாங்கம் கவலை அடைந்திருப்பது சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை இத்தகைய சம்பவங்கள் சட்ட ஒழுங்கைச் சீருலைத்து விடுமெனவும் சனாதிபதி செயலகம் விடுத்துள்ள, ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டோரை இணங்காண்பதற்காக சிறிலங்காப் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கின் தற்போதைய நிலையை ஆராய்வதற்காக இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் சூலசெனலிரட்ன நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக மட்டக்களப்பிற்குச் சென்று பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்தகொட்டேகொட செனவிரட்ணவை பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலநறுவ பௌத்த ஆலயத்திலிருந்து 14 தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைது

ஆயுதங்களுடன் பதினான்கு தமிழ் இளைஞர்கள் பௌத்த ஆலயம் ஒன்றிலிருந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் பொலநறுவ மாவட்டத்தில் உள்ள ஹிங்குராகொடவில் புல கிராமத்தில் உள்ள பௌத்த ஆலயத்தில் இருந்தே துப்பாக்கிகளுடன் இப் பதினான்கு இளைஞர்களும் கைதாகியுள்ளனர்.

இப் பௌத்த ஆலயத்தின் பிரதம பிக்கு சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் ஆவார்.

குறித்த இளைஞர்கள் கிழக்கிற்கு போவதற்கு தயாராய் இருந்தார்கள் என்றும் ஆனால் அவர்கள் ஆயுததாரிகளாக இருந்ததை தான் அறியவில்லை என்றும் இப்பிக்கு பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்

மேலும் இப் பிக்கு இந்த இளைஞர்கள் கொழும்பிலுள்ள ஜாதிகஹெல உறுமயவின் தலைமயகத்தினால் தனக்கு அனுப்பப்பட்டவர்களென உரிமை கொண்டாடியுமுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளனர் என ஹிங்குராகொட பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இளைஞர்களை விடுவிப்பதற்கான கடும் முயற்சிகளும் மேற்கொள்ளப் படுவதாக ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.

கைதான இளைஞர்கள் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவின் பின் புலத்தில் இயங்கும் துணை இராணுவப் படை உறுப்பினர்கள் என சந்தேகிக்கப் படுகின்றனர் எனவும் ஊடக வட்டாரங்கள் கூறுகின்றன.

## உத்தியோக பூர்வ சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பதினேழாவது இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்தகொட்டேகொட சனாதிபதி சந்திரிகா குமார்துங்கவை நேற்று உத்தியோகபூர்வமாகச் சந்தித்தார்.

சனாதிபதி மாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பின் போது சனாதிபதி சந்திரிகா புதிய இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொடக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## மீண்டும்...

அரசடிச் சந்தியிலும், வந்தாறு மூலையிலுமாக நடந்த இருவேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நேற்று இடம்பெற்ற இவ்விரு சம்பவங்களும் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெற்றுள்ளது ஏற்கனவே இவ்விதமான படுகொலைகள் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. நாங்கள் பல சந்தர்ப்பங்களில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினருடன் தொலைபேசி மூலமும் பேச்சு வார்த்தைகளின் போதும் படுகொலைகள் மிரட்டல்கள் நடைபெறாமல் தடுப்பது சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என வலியுறுத்தியுள்ளோம். ஆனால் இவ்வறிவித்தலை சிறிலங்கா பாதுகாப்பு படையினர் கரிசனையில் எடுத்துக் கொள்ளவில்லையெனஎமக்குத் தோன்றுகின்றது. சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையாக இவற்றை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகை செய்தவண்ணம் இருக்கின்றனர் என்பது இச்சம்பவங்களில் புலனாகின்றது. இச்சம்பவங்களை பாரிய யுத்த நிறுத்த மீறல்களென விடுதலைப்புலிகள் கருதுவதோடு இதை வன்மையாகக் கண்டிக்கின்றனர். நாங்கள் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு சமாதான ஒப்பந்தத்தை மதித்து பேணிக் காப்போம் என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம். எம்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக் கப்பட்டால் அதை நாம் எதிர்கொள்ளத் தயார் என்றும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம்.

## இரு...

கைத்துப்பாக்கியால் சுடப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொடர்ந்து காலை 10.00 மணியளவில் மோட்டார் சைக்களில் சித்தாண்டியில் இருந்து செங்கலடி நோக்கி வந்து கொண்டிருந்த இரு போராளிகள் மீது வந்தாறுமூலை கத்தோலிக்க தேவாலய முன்றலில் வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் போராளி முறிஞ்சன் வீரச்சா வடைந்துள்ளார். போராளி ரொசான் காயமடைந்துள்ளார்.

இவர்களின் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்கள் மேல் கைத்துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

## யாழ்.நெல்லியடியில்...

கரும்புலிகள் தினம் யாழ்.குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. முக்கிய நிகழ்வுகள் 1987ஆம் ஆண்டில் ஜூலை - 05ஆம் திகதியன்று முதல் கரும்புலித் தாக்குதல் இடம்பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்றலில் இடம்பெற்றது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முன்றலில் நிறுவப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவு மண்டபத்தில் பிற்பகல் 5.30 இற்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. தயா ஏற்றிவைத்தார்.

இதையடுத்து நெல்லியடிச் சந்திப் பகுதியில் இருந்து முதற் கரும்புலி கப்டன் மில்லர், முதற் பெண் கரும்புலி அங்கையற்கண்ணி மற்றும் கரும்புலிகளது நினைவுப் பொது உருவப்படம் என்பவை மூன்றும் பவனியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு எடுத்து வரப்பட்டன. நெல்லியடி - வதிரி வீதியூடாக வந்த பேரணியின் முன்னணியில் பாடசாலை மாணவர்களது பாண்ட் வாத்திய அணி வகுப்பைத் தொடர்ந்து கரும்புலிகளது பெற்றோர் கௌரவித்து அழைத்து வரப்பட்டனர்.

அத்துடன் கப்பல் வடிவில் அமைக்கப்பட்ட ஊர்தியொன்றில் அனைத்து கரும்புலிகளது உருவப்படங்களும், அதைத் தொடர்ந்து வெடிமருந்தேற்றிய வாகனத்தைச் சித்திரிக்கும் டிரக் வண்டியொன்றும் எடுத்துவரப்பட்டது.

முதல் கரும்புலித் தாக்குதல் இடம்பெற்ற நேரமான பி.ப. 7.34 மணியளவில் கரும்புலிகள் நினைவு மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள முதற்கரும்புலி கப்டன் மில்லரினது உருவச்சிலை முன்றலில் அவரது தாயார் திருமதி வல்லிபுரம் கமலாதேவி ஈகச் சுடரை ஏற்றிவைத்து மில்லரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து கரும்புலி மில்லர் நினைவு நடுகல்லிற்கு யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த சொலமன் சூ.சிறில், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சி. தர்மலிங்கம் ஆகியோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

261 கரும்புலிகளதும் உருவப்படங்களுக்கும் பெற்றோர், உறவினர் மற்றும் சக போராளிகள் மலர் மாலை அணிவித்தும், ஈகச் சுடரேற்றியும் அஞ்சலி செலுத்தினர். அதைத் தொடர்ந்து பொது மக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

கரும்புலிகள் தின இறுதி நிகழ்வுகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இதில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினரினால் கரும்புலிகள் நாள் சிறப்பு வெளியீடாக "நெருப்பு மனிதர்கள்" எனும் நூலும் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது.

## மன்னாரில்...

கரும்புலிகள் நாள் மன்னார் அரிப்புத்துறையிலும் வெகு எழுச்சி பூர்வமாக இடம்பெற் றுள்ளது.

அரிப்புத்துறை முக்கிய சந்தியில் இருந்து மாலை 5.30 மணியளவில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் பன்னிரெண்டு கரும்புலிகளின் திருவுருவப்படங்களும் ஊர்வலமாக பாடசாலை மைதானத்திற்கு எடுத்து வரப்பட்டன.

அங்கு பொதுச்சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார். கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர் மலர் மாலை அணிவித்தனர்.

மன்னார் மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் அஞ்சலி நடனமும், தொடர்ந்து கடற்புலிகளின் தளபதி அர்ச்சுனன் கல்விக் குழு உறுப்பினர் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இதேவேளை, அடம்பன் பிரதேசத்திலும், ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்தில் அடம்பன் பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

## வவுனியாவில்...

வவுனியாவில் வவுனியா உக்குளாங்குளம் பைட்டர் விளையாட்டு மைதானத்தில் வவுனியா மாவட்டத்திற்கான கரும்புலிகள் நாள் சிறப்பாக 'நடைபெற்றது. வவுனியா பண்டாரிக்குளம் பாடசாலைக்கு முன்பாக மாலை 5.45 மணியளவில் ஆரம்பமான கரும்புலிகளின் உருவப்படத்தினை தாங்கிய ஊர்தி உக்குளாங்குளம் பைட்டர் விளையாட்டு மைதானத்திற்கு பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் மாலை 6.15 மணியளவில் கொண்டு வரப்பட்டது. அங்கு வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. வவுனியா மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் தேசியக் கொடியினை ஏற்றினார். பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார். மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு பெற்றோர் ஈகச்சுடர்களை ஏற்றினார்கள். தொடர்ந்து மலர் மாலைகளினை பெற்றோர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், போராளிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள் என்று பலரும் அணிவித்தனர்.

## புதுக்குடியிருப்பில்

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை புதுக்குடியிருப்பில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வு புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் அமைந்துள்ள கரும்புலிகள் நினைவாலயத்தில் புதுக்குடியிருப்பு வர்த்தகசங்கத் தலைவர் பெ.கந்தசாமி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

தேசியக்கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றி வைத்தார். தொடர்ந்து முதற் கரும்புலி கப்டன் மில்லரின் உருவப்படத்துக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் சுடர்ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து ஏனைய கரும்புலிகளுக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அடுத்து முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் சி.வேதவனம், கிராம அலுவலர் கனகசுந்தரசுவாமி இரணைப்பாலை பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகளார், காவல் துறையின் குற்றப் புலனாய்வுத்துறை கண்காணிப்பாளர் கானகன் ஆகியோர் நினைவுரையாற்றினர். சிறப்புரையை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆற்றினார்.

## துணுக்காயில்...

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வு மிகச் சிறப்புடன் நடைபெற்றது. மல்லாவி மாவீரர் மண்டபத்தில் இருந்து கரும்புலிகள் திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலி செலுத்திய பின்பு மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் நேற்றுக் காலை 08.30 மணிக்கு நகர்ந்து யோகபுரம் மகா வித்தியாலய மண்டபத்தை வந்தடைந்தது.

காலை 09.00 மணிக்கு நிகழ்வுகள் துணுக்காய் அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் பொதுச்சுடரினை மல்லாவி வர்த்தகசங்கத் தலைவர் சி.தர்மலிங்கம் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்திற்கு ஈகச் சுடரினை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் செல்வி அமுதா, முல்லை. மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைக்க, மலர் மாலையினை கரும்புலி ஒருவரின் தந்தை தர்மகுலசிங்கம் அணிவித்தார். நினைவுரையை ஆசிரியர் யோகபுரம் ம.வி அதிபர் திருமதி.க கிருஸ்ணபிள்ளை நிகழ்த்த சிறப்புரையை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

## தென்மராட்சியில்

கரும்புலிகள் நினைவாக சாவகச்சேரியிலும், கொடிகாமத்திலும் ஏற்பாடுசெய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் பெருந்தொகையான பொதுமக்கள், வர்த்தகர்கள், அரசசார்பற்ற பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள்,வாகனஓட்டுநர் சங்கங்கள், மாணவர்கள் , ஆசிரியர்கள் எனத்திரண்டு வந்து நீண்ட வரிசையில் நின்று மலர்வணக்கம் செலுத்தினார்கள்,

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிக்கு- சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் டாக்டர் அருளானந்தம் தலைமை தாங்கினார். சிறப்புரையை பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர். கொடிகாமம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, கொடிகாமம் வர்த்தக சங்கத்தலைவர் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சிக்கு பனை, தென்னை அபிவிருத்திச்சங்கத் தலைவர், ஓய்வுபெற்ற அதிபர் திருநாவுக்கரசர் மற்றும் கொடிகாமம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ரத்தினம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## மாங்குளத்தில்...........

மாங்குளம் பகுதியில் லெப். கேணல் போர்க் அவர்களின் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ள இடத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட பெண்கள் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் நிறஞ்சனா ஏற்றிவைத்தார். தேசியக் கொடிக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் போராளி பாவரசி ஏற்றி வைத்தார். தொடர்ந்து லெப். கேணல் போர்க் அவர்களின் நினைவுத் தூபிக்கு மலர்மாலையினை மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் அணிவித்தார். தொடர்ந்து சிறப்பாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் வைக்கப்பட்ட கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்குரிய ஈகச் சுடரினை மாங்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி பாலச்சந்திரன் ஏற்றிவைத்தார். பின்னர் மாலை 7.00 மணியளவில் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

அத்தோடு கரும்புலிகள் நாளை முக்கியப்படுத்தும் முகமாக மாங்குளம் வெண்புறா நிறுவனத்தினர் வலுவிழந்தோருக்குப் பயன் தரு மரக்கன்றுகளை வெண்புறா நிறுவனத்தில் வைத்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில்...

பழுகாமம் பொது விளையாட்டரங்கில் நேற்றுமாலை 4.30 மணியளவில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் ஈகச் சுடரினை கிழக்கு மாகாணக் கடற்புலிகளின் தளபதி சிறிராம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை மட்டு-அம்பாறைச் சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் ஏற்றிவைத்தார். மட்டு-அம்பாறை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது குவேனி தலைமையுரையையும் களஆசிரியர் காண்டீபன் நினைவுரையினையும் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மாவடி மும்மாரிக்கோட்ட இராணுவத் தளபதி க.ரமணன் மற்றும் தளபதிகளும் கலந்துகொள்ள அதே வேளைமட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை பா.அரியநேந்திரன், இ.தங்கேஸ்வரி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## வடமராட்சிகிழக்கில்.........

வடமராட்சி கிழக்கிலும் கரும்புலிகள் நாள் மிக உணர் வெழுச்சியுடன் கொண்டாடப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு- மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கலை நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைத்தார்.அடுத்து மருதங்கேணி வடக்கு சனசமூக நிலையத்திலிருந்து வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 15இற்கும் மேற்பட்ட கரும்புலி மாவீரரின் பெற்றோர்கள் மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டனர். பெற்றோர்கள் நிகழ்வு மைதானத்தை வந்தடைந்தவுடன் பொதுப் படத்திற்கான பொதுச்சுடரினை கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் ஏற்றிவைத்தார். தொடர்ந்து 15இற்குமேற்பட்ட கரும்புலிகளின் திருவுருவப் படத்திற்கு அவர்களின் பெற்றோர்கள் சுடரேற்றி மாலை அணிவித்தனர். அத்துடன் இதுவரை வீரச்சாவடைந்த 261 கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் கப்பல் செய்யப்பட்டு அதில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. இப்படங்களுக்கு பெருந்திரளான மக்கள் சென்று அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் ஆரம்பமான அரங்க நிகழ்வுகளில் லெப்.கேணல் ராஜன் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த தேவன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் , கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் ஆகியோரின் சிறப்புரைகளுடன் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கலும் இடம்பெற்றது. கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## கிளிநொச்சியில்......

கிளி.மாவட்டத்தில் கிளிநொச்சியில் அமைக்கப்பெற்ற கரும்புலிகள் நினைவுப்பந்தலில் உமையாள்புரம் மாதர் சங்கத் தலைவி திருமதி விக்டர்சாந்தி தலைமையில் கரும்புலிகள் நினைவுதின காலை நிகழ்வுகள் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை கரும்புலி மேஜர் அருளவனின் தாயார் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை குட்டிசிறி மோட்டார் படையணி மகளிர் படையணித் தளபதி பவநிதி ஏற்றி வைத்தார். அடுத்து மாவீரர் கடற் கரும்புலி மேஜர் கதிரவனின் தாயார் கரும்புலிகளின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

அக வணக்கத்தினை தொடர்ந்து நினைவுரைகளை தமிழீழக் கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம், கனகாம்பிகைக்குள வித்தியாலய ஆசிரியர் சுபாஜிதன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் வழங்கினர். அடுத்து கவிதைகள் இடம்பெற்றது.

அடுத்து மாலை நிகழ்வாக கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி, பிற்பகல் 5.00 மணிக்கு கிளி. டிப்போச் சந்தியில் ஆரம்பமாகி ஏ-9 பிரதான வீதிவழியாக கிளிநொச்சி கரும்புலிகள் நினைவு மண்டபத்தினை மாலை 6.00 மணிக்கு வந்தடைந்தது.

மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்தியம் முன்வர அதனைத் தொடர்ந்து கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பின் தொடர கனகபுரம் மகாவித்தியாலய மாணவிகளின் பாண்ட் வாத்திய அணியும், அதனைத் தொடர்ந்து கரும்புலி மாவீரர்களின் பெற்றோர் மலர் மாலை அணிவித்து அணிவகுத்துவர தொடர்ந்துமாணவர்கள் போராளிகள் பொதுமக்கள் ஊர்வலமாக நினைவு மண்டபத்தினை வந்தடைந்தனர்

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சுபசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பொது ஈகச்சுடர் மற்றும் கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கோபி ஏற்றிவைக்க கரும்புலிகளின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை கரும்புலிகளின் பெற்றோர் அணிவித்தனர். ஒலி, ஒளி நாடா சிறப்புப்பிரதி மற்றும் நூல் வெளியீட்டினை மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் கந்தம்மான் வழங்கி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து நினைவுரைகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், லெப்.கேணல் ராஜன் பயிற்சிக்கல்லூரி களமுனை ஆசிரியர் அகன் அழகன் ஆகியோர் வழங்கினர்.

## வவு.வடக்கில்...

வவுனியா வடக்கு பிரதேசத்திலும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக நடைபெற்றுள்ளன.

பிரதான வீதியில் இருந்து மாவீரரின் பெற்றோர்கள் ஊர்வல மாக அழைத்துச் செல்லப்பட்டு இரவு நிகழ்வுகள் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமானது.

வவுனியா வடக்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் கருத்துரையினை லெப்.கேணல் ராஜன், கல்விப் பிரிவின் களமுனை ஆசிரியர் பொதிகைமலை நிகழ்த்தினர்.

## முல்லைத்தீவில்...

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 5.45 மணியளவில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது. நிகழ்வின் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட வருவாய்ப்பகுதிப் பொறுப்பாளர் ச.வேந்தன் ஏற்றிவைத்தார். பின்னர் 7.05 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து கரும்புலிகளுக்கான மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவாலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு உறவினர்கள், மாணவர்கள்,போராளிகள், பொது மக்கள் எனப்பலரும் விளக்கேற்றி மலர் வணக்கம் செய்ய, மேடை நிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ,கடற்கரும்புலிகளின் உயிராயுதம் படவெளியீடும் கடலிலே காவியம் படைப்போம். ஒளிநாடா பாகம்-08 உம் வெளியிடப்பட்டது.

படநாடாவை கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் வெளியிட்டு வைக்க, முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தலைவர் மனோ பெற்றுக்கொண்டார், ஒலிநாடாவை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி லெப்கேணல் பகலவன் வெளியிட்டு வைக்க முல்லை. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பெற்றுக்கொண்டார். (27,33,28, மி,11,சோ,லோ,ச,கு,08,20,10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.